ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்.

4531

—*—

பொதியமலையிலெழுந்தருளிய

அகத்தியமகாமுனிவர்

திருவாய்மலர்ந்தருளிய

பஞ்சபட்சிசாஸ்திரம்

அதற்கியைந்த சக்கரங்களும்

சங்கரனார் உமாமயேஸ்வரிக்கு

அருளிச்செய்த

ஞானசரநூல் சாஸ்திரம்.

மூலமும்-உரையும்.

சென்னை-இட்டா.

பார்த்தசாரதிநாயுடு

அவர்களாற் றமது

ஸ்ரீபத்மநாபவிலாச அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

MADRAS.

1900.

நெ. 1. திருப்பள்ளிசந்து பெத்துநாய்க்கன்பேட்டை.

உ

சிவமயம்.

சங்கரனார் திருவுளமகிழ்ந்து

உமாயயேஸ்பரிக்கு அருளிச்செய்த

ஞானசர நூல் சாஸ்திரம்.

மூலமும்-உரையும்.

காப்பு.

நேரிசை வெண்பா.

வாழ்த்துவாமுள்ளம் வருவி பாநெஞ்சமுன்பிற்
சூழ்த்துவாமேன்மேற் றுதிசெய்வாந்—தாழ்த்த
பரநூலைமற்றுமறப் பாலித்தருள்கூட்டுஞ்
சரநூலையோதமுன்னோன் றாள்.

நாமகள் துதி.

உமைமாதுக்கீச னுரைத்தசரநூலில்
அமையாப்பொருளு மமையு—மெமையாளும்
புவிமடந்தைபூமடந்தை போதமெய்ஞ்ஞானக்
கவிமடந்தையிக்கலைக்கோர் காப்பு.

அவையடக்கம்.

செய்யமனந்துணிந்த சீர்முன்னோர்சொற்சரநூ
லையமறவோதவருள் புரியைங்—கையரென்றன்
முன்னிற்பாரென்று மொழிந்தேன்போற்கற்றுணர்ந்தோர்
மன்னிப்பாரென்று மனு.

இன்னூற்பயன்.

ஆசிரியவிருத்தம்.

சந்திரபானிலக்கணமுங்கோளுநாளுந்
தயங்கியபக்கங்கரணமியோகம்வாரம்
வந்துசொல்லுஞ்சோதிடத்தையறியாதார்கண்
மனநினைவாயறியும்வகையுளதோவென்ன
விந்தவுடலுயிர்நிலையையறியாதாருக்
கியாமறியவியம்பும்வகையாதோவென்னிற்

பைந்தொடியேயான்சொல்லுஞ் 0 சரநூறன்னைப்
பரிந்துநீபாரென்று பரமன்சொல்வான்.

(இ-ள்) சந்திரன்-சூரியன் கோள்-நாள்-பக்ஷம்-கரணம் - யோகம் வாரம் இவைமுதலாகச் சொல்லப்பட்ட சோதிடவிலக்கணத்தை யறியாதவர்கள், தத்தமன நினைவினாலே யறிந்துகொள்ளுமார்க்கம் உள்ளதோ உண்டாயின் அருளிச்செய்யவேண்டுமென்று உமையவள்கேட்க சங்கரனார்சொல்லுகிறார், அழகியவளையல்கள்பூண்ட கைகளையுடைய பெண்ணே யான்சொல்லுஞ் சரநூலாகிய விந்தச் சாஸ்திரத்தைப் பரிவுடன் பார்ப்பாயாக, பார்க்கில் கன்றுணர்வையென்று சொல்லுகிறார்.

சொல்லாருநெடுங்கயிற்றின் வருணமான சூத்திரனார் துவக்கெனுமாசீர்மந்தன்னி, னல்லாருமூக்கணுங் கயிறுகோத்து நலந்தீங்காய்வருகின்ற நஞ்சுட்கொண்டு, பொல்லாதகாலப்பாம் புண்டுமிழ்ந்து பூதலத்திற்பிறந்திறந்து போவரேனு,மெல்லாருமியாஞ்சொல்லுஞ் சரநூறன்னை யிகழாதார்சுரர்மூங்க ரிகழ்வோர்தாமே.

(இ-ள்) சொல்லப்பட்ட நாற்புரிகூடிய நீண்ட கயிற்றைப்போல பாரம்பரையாய் விர்த்தியாகிவராநின்ற பிர்ம-க்ஷத்திரிய-வைசிய சூத்திராதி வருணாசிரமம்பெற்ற இந்த மானிடதேகத்தில் இச்சரம் நாசிகையின்வழியாய்நின்று எருதுக்கு ஓருமூக்கணுங்கயிறிருந்து ஆட்டுவிப்பதுபோல் நன்மைதீமையென்னு நஞ்சினையூட்டிவிக்கும்அப்படிப்பட்டநஞ்சினையூட்டக்கொண்டு கொடியகாலனென்னும் பாம்பானதுஉண்ணவுமுமிழவுந் தாமுட்பட்டு இருவினைக்கிசைந்தவராய்ப்பிறந்துமிறந்துபோவார்கள், ஆயினும் நான் சொல்லிவருஞ் சரநூலை யிகழாமல் குருமுகாந்திரத்தில்அறிந்து அனுபவித்து அந்நெறியினிற்பவர்கள்யாவரேனுமொருங்கே தேவராவார்கள் அப்படி யறியமாட்டாதவர்கள் ஊமைகளுக்குச் சரியாவார்கள்-எ-று. (உ)

சரம்பார்க்க ஆசனவிதி கூறுகின்றார்.

மூங்கிற்பாய்மிடிகல்லுநோய்மண்டுக்க முறிபலகைநன்மையிலேமுடைந்தபுல்லு, நீங்கிவி ங் கீர்த்திதழைமனநடுக்க நிகரில்கலைத்தோல் ஞானநிறைபுலித்தோ, லோங்கியசெல்வம் வீடுமுன்குகைப்பு வொளிர் தூசுநன்மையுயர்படந்தானென்று, தூங்கியதூக்கம்போக்கு நன்மையாகத் துலங்கியவாதனத்திருந்துதோகைசொல்வாம்

(இ-ள்) மூங்கிற்றடுக்கு ஆதனம்-வறுமை, கல்-வியாதி-மண் ஆதனமில்லாமல் வெறுமணலில் (உளுக்கார்ந்து கொண்டால்) துக்கம், உ

0 சாம என்பது, காற்று-மனம்-சீவன்-சுவாசம்-மூச்சு - பிராணன் ஆவி - உயிர் - உயிர்ப்பு இவை முதலாகச் சொல்லப்பட்டவைதான் என்றறிக.

டைந்த அல்லது அறுபட்டபலகை மணை நன்மையில்லை, கோரைப்பா யல்கள்முதலிய புற்பாயல்கள் கீர்த்திநாசம், பச்சிலேதழை மனநடுக்கம் மான்றோல், ஞானம், புலித்தோல், செல்வம், தர்ப்பாசனம், மோக்ஷம், வெள்ளைவஸ்திரம் தீமையில்லை, சித்திராசனம் அல்லது இரத்நசம்பளம், நன்மை இவைகளில் நன்மையாக விளங்கும்படியான ஆதனத்திலிருந்து (சரம்பார்க்கவேண்டும் மற்றுஞ்சொல்லுகிறேன் கேள் மயில்போனும் அழகிய பெண்ணே—எ-று. (௩)

சரம்பார்க்குமார்க்கங் கூறுகின்றார்.

சொல்லியவாதனங்கள் பலவவற்றுணன்றிற் றுய்யபங்கயாதனமாயிருந்துதோன்று, மல்லலறுத்தேகமனமாக்கியொட்டி யாண்பந்தபிராணயமங்கள்பண்ணி, மெல்லேயிலுந்தியின்கீழாமெழுத்தைப்பற்றி யெழுபத்திராயிரநாடியிலீரைந்து, நல்லனவாயதின்மூன்றுநாடியோடு நலந்தரும்பேரவ்வெழுத்தைநவிலப்பாரே.

(இ-ள்.) முன்கூறப்பட்ட வாதனங்கள் பலவுண்டு, அவைகளில்தீங்கிலலாத ஒரு ஆதனத்திற், யதுமாதனமென்னப்பட்ட அங்கமாயிருந்து (பார்க்கும்போது) மனதுக்கு மிகவும் நினைவினல் அல்லல்வரும், அபடிவரும் அல்லல்களை நீக்கி வேறுநினைவில்லாமல், ஒரே மனமாக்கி ஓட்டியாண பந்தமென்றுசொல்லும் பிராணயாமஞ்செய்து அதன்மேற்பார்க்கில் எல்லையில்லாத திருவருளுக்கிடமாகிய உந்தியின்கீழிருக்குமெழுத்தைத்தொடங்கி எழுபத்திராயிரம் நாடிகள் இந்தத்தேகத்திலுண்டானவை தெரியும் அந்நாடிகளுள் பத்துநாடிகள் நல்லனவாம் அப்பத்துநாடிகளுள் மூன்றுநாடி நல்லன அம்மூன்றின்வழியாய்த் தான் சரம் எளிதிற்காணவோடும் இவையறியப் பெரிதாகிய நன்கினையளிக்கும் அவ்வெழுத்தைப்பார் மான்போலுங் கண்களையுடையபெண்ணே எ-று அன்றியுமிதன் விவரத்துக்கு மற்றும்வருவனவற்றுள் ௩டு-வது கவியைப்பார்க்க.

நவ்விவிழியாயிதய கமலர்தன்னி னன்றாகவசவையுயிர் நடக்கும்போதுஞ், செவ்வியுடன்மீளும்போ திருபத்தோரா யிரத்தறுநூன்றச்செபிக்கி லொருநாளாகு, மவ்வியமூலாதாரஞ் சுவாதிட்டான மணிபூரம் நாகதம் விசுத்தியாகனே, பவ்வமறயாஞ்சொல்லுஞ் சரநூமன்னேப் பார்ப்பவரேபராபரத்தின் பயன்பார்ப்பாரே.

(இ-ள்.) மான்போலும் விழிகளையுடைய பெண்ணே இருதய கமலத்தின் வழியூடுருவிக்கொண்டு யாதொருதீங்குமில்லாமல்அசவையுயி

ரென்னப்பட்ட இச்சரம் நாசிகையின்வழியாய்ப் போகும்போது (ச-அங்குலங்கள்போக) மற்றவை செவ்வையாய்த்திரும்பி வரும்போதும் (கணித்துப்பார்க்கில்) இருபத்தோராயிரத் தறுநூறுதரம் நடக்கும், அது-சுய-நாழிகைசேர்ந்த ஒரு நாளாகும் அப்பரிசெல்லாம் மூலாதாரம், சுவாதிஸ்டானம், மணிபூரகம், அனுகதம், விசுத்தி, ஆக்கினை என்று சொல்லப்பட்ட பரநிலையின் பரிசுதான் (அங்கிருந்து உண்டாயினவெனுங்கருத்து) இதனைக் காணும்வழி யாதெனில், யாஞ்சொல்லுஞ் சரநூலை மயக்கவறப்பார்ப்பதுதான் அப்படிப் பார்ப்பவர் பரமாகவும் அபரமாகவும் விளங்குகின்ற ஒரு வஸ்துவினாலுண்டாகும் பிரயோசனத்தை யறிந்துகொள்வார்—எ-று (ரு)

சந்திரர்சூரியர் சுழிமுனைஇலக்கணமும் மற்றும்

யாத்திரைபலனும் கூறுகின்றார்.

பார்க்கிலிடையிடமதுவேதிங்களாகும் பகலவனும்பின்கலையேவலமதாகும், மேற்கவுரைசுழிமுனைதானடுவாமங்கி யிடையானசந்திரனேயமுதமாகும், தீர்க்கமுடன்பொருள்விளைக்குங்கரியவண்ணந் திரராசியாமவனேசெப்புங்காலை, வேற்றடங்கண்மடமாதேவிரும்பிக்கேளாய் விரிவாகவிவையனைத்தும்விளச்சொல்வாம்.

(இ-ள்.) ஆராய்ந்துபார்க்கில் இடைகலையென்பதுவே யிடதுபக்கம் நாசியில்வருஞ் சுவாசம் அதுவே சந்திரகலை யென்னப்படும், பின்கலையென்பதுவே வலதுபக்கம், நாசியில்வருஞ்சுவாசம் சூரியகலை யென்னப்படும், யாவருக்கும் ஒக்கசொல்லுங்காலத்தில் சுழிமுனையென்பது நடுவாகும், அக்கினியென்னப்படும் பின்னும் அந்தச் சந்திரனை சொல்லுமிடத்தில் அமுதம் தீர்க்கமாக எப்பொருள்களையும் உண்டாக்குவன நிறங்கருத்தவன் ராசியில் திரராசி, வேல்போலுங் கண்ணினையுடைய பெண்ணே மற்றுமுண்டாகிய வனைத்தும், பரிஷ்கார்மாகச் சொல்ல அதனை நீ விருப்பமுற்றுக்கேட்பாயாக—எ-று.

அறியும் அச்சுழிமுனை இரண்டு நாசிகையிலும் பரவியோடும் அதற்குப் பூரணமென்றும் பெயர். (சா)

இதுவுமது.

சொல்லுங்காற்கதிரவனுஞ்சகவியாபி சுத்தநிலம் வெண்மைசரராசியாகும், கொல்லுமெலாக்கருமங்கள்கொடியவன்னி கூறுங்காணிறஞ்சிவப்பாமுபயராசி, நல்லவிடைதெரிந்துணர்கிற்றிங்கள்பெண்ணும் நலம்பயில்பின்கலைகதிரோன்புருஷனாகுஞ், சொல்லுமிருபதின்காதவழிக்கப்பாலாந் திசைக்கிடமாய்ச்செவ்வலமூர்சேரக்கேளே.

(இ-ள்.) சூரியனுடைய குணகுறிகளைச் சொல்லுமிடத்தில் அந்தச் சூரியன் உலகத்தில் வியாபகமுற்றவன் பரிசுத்தமான வெண்மைநிறத்தையுடையவன் ராசியில் சரராசி, சுழிமுனையென்னும் அக்கினியைச் சொல்லவென்றால் சகலகருமங்களையுமழிக்கும், பொல்லாதுநிறம் அக்கினிச் சிவப்புராசியில மேற்சொல்லிய விரண்டுராசியுங் கூடியது இன்னமும் நன்றாய்த்தெரிந்துபார்க்கில் இடைகலையென்றுசொல்லப்பட்ட சந்திரன் பெண்பால் பின்கலையெனறுசொல்லப்பட்ட அந்தச்சூரியன் ஆண்பால் (சுழிமுனை யென்னப்பட்ட அந்தஉபயராசியானது அஃறிணைப்பால் அல்லது அலியாகும்) அன்றியும் இருபதின்காதவழிக்குமேற்பட்டதுலைவான தேசத்துக்குப் போகும்போது புறப்பட்டுச் சூரியகலையோடும்போது அத்தேசத்தில்போய்ச்சேரவேண்டியதுஇன்னமுஞ் சொல்லுகிறேன்கேள்-எ-று.

சந்திரனிலக்கணம் அதிலும் அச்சந்திரனடக்கும்போது

இன்னவைசெய்யலாமென்று கூறுகிறார்

கேட்கிலிடந்தூதாடை யணிபொன்பூணம் கிளர்க்குமணமடிமை கொளற்கிற்நீர்காண்டல், வாழ்க்கைமனையெடுத்தல்குடிபுகுதல்விற்றன் மன்னவரைக்காணலுண்மைமருவல்சாந்தி,வேட்கைதெய்வப்பதிட்டை சுரம் வெறுப்புத்தீர்த்தால் வித்தைபெறற்றனம்புதைத்தன் மிகவுமீத ஞாட்கமலமலர்முகத்தாய் நரகந்தீர்த்த னன்றேயாமிவையெல்லா நயந்துபாரே.

(இ-ள்.) சந்திரகலை இடதுநாசிகையி னடக்கும்போது எந்தெந்த காரியங்கள் செய்யலாமென்று வினவிக்கேருகில் அந்த இடகலையில் ஒருவரைத் தூதனுப்புதல், தூது தானேபோகுதல், புதியவஸ்திரந் தரித்தல், ஆபரணதிகள் பூண்டுகொள்ளல் விவாகஞ்செய்துகொள்ளுதல் (தாலிகட்டல்) ஒருவனை யடிமையாகப் பெற்றுக்கொள்ளல் கிணறுமுதலிய குளம் ஏரிவெட்டுதல், வாழும்படியான வீடுமனை வாங்குதல், ஒருவீட்டிற்குக் குடிபோகுதல், ஒருவஸ்துவைவிற்குதல் நூதனமாய் உண்மையாகிய வஸ்துவைச்சார்தல் சாந்திகழித்தல் இஷ்டதெய்வ பிரதிஷ்டைசெய்தல், சுரந்தீர்த்தல், வெறுப்புத்தீர்த்தல் (ஒருவனைச் சமாதானஞ்செய்தல்) கல்விகேட்டுக்கொள்ளுதல், தானந்தானிய முதலிய ஆஸ்திசேர்த்துவைத்தல், தியாகங்கொடுத்தல், பாலவிமோசனஞ் செய்தல், இவையெல்லாம் நன்மையாகும் மற்றக்காரியங்கள் மத்திப

மொன்றறிக அன்றுமலர்ந்த தாமரைப்பூப்போலு முகத்தினையுடைய பெண்ணே—எ-று, இன்னமுமிதிற் செயலறியவென்றால் சஅ-ங்,கவி யையும்-சஎ-ங் கவியையும்பார்க்க (அ)

சூரியனிலக்கணம் அதிலும் சூரியனடக்கும்போது

இன்னவைசெய்யலாமென்று கூறுகின்றார்

பார்க்கில்வலத்துபதேசம் வித்தைசேவை படையோட்டல்பயிர் செட்டுக் களவுசூது, பேர்க்கொணு வழக்குனைத்தல்கரி பரிதேரூர்தல் யிறங்குமெழுத்திடுதல்சங் கீதம்பாடல், வார்த்தை பகைபங்கக்கோள் பசாசுதீர்த்தன் மந்திரஞ்சாதித்த மருந்துண லுறங்கற், கோத்தபுன லாடல்கொல்விடங்கடீர்த்தல் கொடும்பிணிதம்பனயோகங் குறிக்குங் காலே.

(இ-ள்.) வலதுநாசிகையில் சாரமோடும்போது எவைசெய்யத்தக் கவையென்று விசாரித்துபார்க்கும்போது எவை செய்யத்தக்கவையெ ன்று விசாரித்துப்பார்க்குமபோது, குருவுபதேசம்பெற; தாமொருவ ருக் குபதேசம்பண்ணல் வித்தை பாராயணஞ்செய்தல் வித்தை யொ ருவருக்கோதல், ஒருவனை வணங்கல்; எதிரியினுடைய படையைத்துர த்த; பயிர்விளைத்தல் வியாபாரஞ்செய்தல் திருடல், சூதமாடுதல்ஒருவ னாலுந் தீர்த்தற்கரியதாகிய வழக்குபேசல்; இயானை - குதிரை-தேர்-இ வைகளிலேறி சவாரிபோதல் விளங்கிவரும்படியான எழுத்தெழுதல்- சங்கீதம்பாடல் பேசத்தொடங்கல் பகைமையுண்டாக்கல் ஒருவனைப்ப ங்கம்பண்ணல்; கோள்சொல்லுதல்; பசாசு ஓட்டுதல்; மந்திரநிட்டை சாதிக்குதல்; மருந்துசாப்பிடுதல்போசனம்புசித்தல் நித்திரைசெய்தல் ஸ்நானஞ்செய்தல் கொல்லுதற்கேதுவாகிய விஷங்களை நிவிர்த்திசெய் தல் கொடியவியாதியைத்தீர்த்தல்; தம்பனயோக சாதனஞ்செய்தல் இ வைகளையெல்லாங் குறித்தனுபவித்துப்பார்க்கில் நன்டையாகும்-எறு; மற்றிச் சூரியசந்திரர் இருவருக்கும் விபரம்-சகூ-ங்-கவியையும்-சஅங் கவியையும் பர்க்க. (கூ)

சுழிமுனை பூரண சூனியபலன் கூறுகின்றார்

காலிரண்டுமொத்தக்காற்சமாதிநன்றாங் கருதியதொன்றாகாதுகா ணுமெனிற்காணு; சீலமிகுந்தவமுடையாய்நன்மையில்லை தீயானவாங் கருமஞ்சேரக்கூடுஞ் சாலநிறைபூரணத்தில்வழக்குவாது தர்க்கம்போ ரங்கமன்னர்தம்மைக்காண்டன், மூலமறுஞ்சூனியத்தினிறுத்தில்வெல் வர் முயல்வதெல்லாங்கயல்விழியாய்முயலலாமே.

(இ-ள்.) சுழிமுனையா யிரண்டுசரமும் ஒத்தோடுகையில் என்ன வைசெய்யலாமென்றால்; சமாதியோகஞ்செய்தல்; (கருவி காரணங்க

ளோயச் சும்மாவிருக்குதல்) நன்மை, நினைத்தகாரியம் ஒன்றேனுமாகா து; அப்போது ஒருவன்வந்து இப்பொருளகப்படுமோவென்றால் அது அகப்படாது; சீலம்பொருந்திய தடமுடையபெண்ணே, இந்தச்சுழிமு னை நடக்கும்போது நன்மையேகிடையாது, கெட்டகாரியங்களெல்லா ம் பலிக்கும், இது இங்ஙனநிற்க (சரம்) மூக்கில் எந்தப்புழையில் ஓடு கின்றதோ அந்தப்பக்கம் பூரணமென்றும், சரம் ஓடாதபக்கம் சூனிய மென்றும்பேர், இப்படியான குறைவில்லாத பூரணபக்கத்தில்நின்று வ ழக்குப்பேசுகிறவர்களை, தர்க்கம்பண்ணுகிறவர்களை, சண்டைபண்ணு கிறவர்களை, ஒருவன்போய்க்காணும் அரசனை (அல்லது) தமக்குமேற் பட்டவனை இவ்வாறு கூறப்பட்டவர்களை இதனால் காணலாமென்றனஉ ருசாட்சியும் இல்லாதபடி சரமோடாதபக்கமாகிய சூனியபக்கத்தில் நி றுத்தினால் பூரணபககத்திலிருக்கிறவன் வெல்வான அல்லாமலும் ஒரு வன் இப்படிப்பட்டவர்களைத் தனக்குச் சரமோடாத சூனியபக்கத்தி ல்நிறுத்தினால் அவன்பேச்சே மேலாய்வெல்வன்,எவ்வெவற்றைஎவ்வெ வ்வாறு நாட்டமுற்றறியவேண்டுமோ அவ்வவ்வாறே யறியலாம் சேல் மீன்போலுங் கண்களையுடையபெண்ணே—எ-று, (ய)

யாத்திரை பிரயாணம் போகும்போது சரம்.

இசைவுபிசகாயிருந்தால் அதற்கு உபசாதம் கூறுகின்றார்.

முயலுங்காற்பூரணத்தி லிடத்திலிரண்டடிபோ முன்வலமென்மூ ன்றடிபோ மொழியும்யாத்திரைக்கு, கயலடருங்கண்மடவாய் கருமம துமுற்றுங் கருதுவடக்குங்கிழக்கு மிடத்தேபோகி, லியலுமொருபகை யுண்டா மீளமாட்டா ரிசைந்தவலந்தெற்குமேற் கேகவென்னிற், புயல டரும்புனல்புகுந்து மரணமாவார் புணர்முலைக்கச்சிறுமிடையால் போ ற்றிக்காணே.

(இ-ள்.) பின்-யகூ-ங்கவியில் சொல்லியபடி மேற்றிசையும், தென் றிசையும், சந்திரன்றிசை-வடக்கு-கிழக்கும், சூரியன்றிசை, இதுஇங்ங னம்நிற்க சொல்லப்பட்ட யாத்திரைபோக நாடியவன் சந்திரனில் சந் திரன்திசையே போகவேண்டியது, சூரியனில் சூரியன் திசையேபோக வேண்டியது, அல்லாமலும் முன் ஏழாங்கவியிற் சொல்லியபடி இருப தின்காதவழிக் கப்புறமான தலங்களுக்கும் சந்திரனில் புறப்பட்டுச்சூ ரியனில் ஊர்போய்ச்சேரவேண்டியது, அப்படிசேரத் தருணபேதமா ய்ச் சரமுமிசைவுபிசகாய் மாறியோடினால் (அதற்கு உபசாந்தம்யாதெ னில்) சூரியகலையிற் போகவேண்டிய திக்கின் யாத்திரைக்குச் சந்திரக லையாயிருந்தால் அந்தச்சந்திரன் சுவாசத்தையேற வுள்ளேயிழுத்துப்

பூரணமாக்கி இந்தக்காலையே இரண்டுதரமுன்னிட்டு வைத்து பின்பு, சுதாவாய்நடந்து வழியில் கொஞ்சதூரம் நிற்காமல் போகவேண்டியது (இதுசாந்தி) சந்திரன்பலன்கெட்டுப்போகும் தீமையில்லை சந்திரகலை யிற்போகவேண்டிய திசையின்யாத்திரைக்குச் சூரியகலையாயிருந்தால் சூரியன் சுவாசத்தை ஏறவுள்ளேயிழுத்து அக்காலையே மூன்றடி முன் னிட்டுவைத்துப் பின்பு சுதாவாய்நடந்து வழியில் கொஞ்சதூரம் நிற் காமல் போகவேண்டியது, (இது அதற்குச்சாந்தி) சூரியன்பலன் கெ ட்டுப்போகும் தீமையில்லை சேல்போலுங் கண்களையுடையபெண்ணே போகிறகாரியம் ஜெயமாகும், இப்படியல்லாமல் வடக்குத்திசையும், கிழக்குத்திசையும், (யாத்திரை) சந்திரநடககும்போது போனல்,போ கிறவிடத்தில் ஒருவனுக்கொருவன் விரோதப்பட்டுப்போவான், திரும் பமாட்டான்; மேற்குத்திசையும், தெற்குத்திசையும் சூரியகலைபாயும் போது யாத்திரைபோனல் சலத்தினல் அல்லது, மழையினல் இரந் துபோவார்கள் கச்சினுலிறுகி நெருங்கிய தனங்களையும், இப்போதுதா னற்றுப்போவதுபோற் றோற்றுகின்ற இடையினையுமுடைய பெண் ணே விசுவாசித்துப்பார்—எ-று. (யக)

ஒருவனுக்கு நன்மைதீமைசொல்லு மார்க்கங்

கூறுகின்றூர்.

காணவொருகருமத்தைக் குறித்துவந்தோன் கருதியமுன்னுமிட முமேலுமிந்து, பேணுவலமுங்கீழும் பின்னும்வெய்யோன், பேசியசொ ல்லெழுத்திரட்டை சேர்மனுகு, மாணுமெழுத்தொற்றையேற் கதிரோ னுகு; மதிக்குமவன்பூரணத்தில் வந்துகேட்கிற், பூணவுரைத்தனவெல் லாநன்றேயாகும், பொல்லாதுசூனியத்திற் புகலுவோர்க்கே.

(இ-ள்.) நாம் விழையுங்காரியம் நன்றோ-தீதோ கண்டறிவோமெ ன்று வந்தவன் முன்-ம-ங்கவியிற் சொல்லியபடி சூரியகலை நடக்கும் போது, அவன் அப்பூரணபக்கமாகவே; யிருந்தானுகில்அவன்பொருந் தச்சொன்ன காரியங்களெல்லாம், அவனுக்குச் சித்திக்கும் அப்படியி ல்லாமல் வலதுபக்கத்தில் நின்ருலும், சரம் பார்க்கிறவன் மேலிருக்க வந்தவன் கீழிருந்துகேட்டாலும், நேர்நேரே பின்னிருந்துகேட்டாலும் அச்சூரியகலைக்குடைய பலிதமேசொல்க, சந்திரகலை நடக்கும்போது, அவன் அப்பூரணபக்கமாகவேயிருந்து வினவினுனுகில் அவன் சொன் ன காரியங்களெல்லாம் அவனுக்குப்பலிக்கும், அப்படியில்லாமல் இட துபக்கத்தில் நின்ருலும், நேர்நேரே முன்னேநின்ருலும், மேலிடத்தி லிருந்தாலும், அச்சந்திரகலைக்குடைய குணமே சொல்க, இதுதவிர

சரம்ஓடாத சூனியபக்கத்தில்நின்று கேட்டானாகில் அவன்கேட்டகாரியம் பொல்லாதாகும், பலிக்கமாட்டாதென்க, அல்லாமலும் அவன்முதல் வாய்திறந்துசொன்ன வார்த்தையின் எழுத்தை யெண்ணிப்பார்த்து ஒற்றைப்பங்காகில் சூரியனுடைய குணஞ்சொல்க,இரட்டையாகில் சந்திரனுடைய குணஞ்சொல்க; மேல்-கீழ் என்றது, மெத்தைவீட்டையும், கிணறுமுதலிய பள்ளக்குழிகளைக் குறித்தென்றறிக, இப்படியாக, ரு-சூ-வகையிற் சொல்லியிருக்கின்றதே இவையெல்லா மேககாலதிலொத்திருக்க வேண்டுமென்பதில்லை, ஏதாவது ஒன்றைப் பார்த்து சொல்லலாமென்பது கருத்து. மற்றும் வருவனவற்றுற்காண்க. இன்னமும் விரித்துச்சொல்லுமளவில் சந்திரனுடைய திசையும் பக்கமும்,அதுசூனியமானாலுஞ்சரிதான் திரணமாயினது நன்மையுண்டே யல்லது வியர்த்தமாகாது, இதற்குப் பிரமாணம் (சூ-ங்) கவியிலும் (எ-ங்) கவியிலும் சந்திரனைத் திராசியென்றுஞ் சூரியனைச் சராசியொன்றுஞ், செப்பியிருப்பதனையறிக, இக்கவிகளில் உரி-பண்பு-அல்லது, அடைமொழிகளை சோரவிடாமல் பதவுரையாய்ச் சொல்லி வருவோமென்றால்,விரிவுரைக்கு இசைவுபட்டு வருவதரிது ஆயினும் அவ்வுரிகளைமாத்திரம் சேர்த்துக்கொண்டு வருவோமென்றால் ஒரு ஸ்ரீயானவள் தன்புருஷனுக்கு அமளியிற் சம்போககாலத்தில் கால்-கை-படுதல் முதலியகற்புமை தவறுதல்கூடாதென்று அங்குமவைகளை யிருக்கக்காண்பிக்கப் புகுவாள, புகுந்தால் அச்சதிபதிகள்கொண்டகருத்து ஒருமித்துத் தடையின்றி நிறைவேறுமோ ஏறுதுபோல இங்கும் விகாரமில்லாமல்உரைபுணர்வுற மாட்டாதாதலால் சமையவுச்சிதமாய் நேர்படுத்தவும் நிராகரிக்கவுமாயிற்று—எ-று (ம௨)

இதுவுமது.

அதினும் முன்-ம-ங்-கவியிற்சொல்லிய பூரண

சூனியங்களின்விகற்பங்கூறுகின்றார்.

கேடென்றோன் பறிகொடுத்தோ னஞ்சுதின்றோன் கிடையினிற்
சாவென்றோன் கிளர்நோய்கொண்டோன், பாடொன்றுமில்லை சூனிய
த்தேயாகிற் பலித்துவிடும்பூரணத்திற் பகர்ந்தவெல்லாம், ஆடும்பையர
வென்ன வல்குலாளேயடுத்தொருவன் வந்ததிசைசோமனாகி,நீடுஞ்சொ
ல்லிரவியா நினைந்தமொழியாகாது நின்றுபாரே.

(இ-ள்,) ஒருவன்வந்து நாளின்னதனால் கெட்டுப்போனே னென்றாலும், நானின்னதைப்பற்றி கொடுத்தேனென்றாலும் விடங்கடித்தது

அல்லது விடமுண்டேனென்றாலும், இதோ படுக்கையிற்றானே பிராணன்போகின்றது என்றாலும் அல்லது இவைமுதலாகச் சொல்லப்பட்ட, அபாயகுணகுறிகள் எவையாயினுஞ்சரிதான் சரம்லோடாத யனியபக்கமாய்வந்து நின்றானாகில்,ஒருவருத்தமுமில்லைநிவர்த்தியாகிப்போகுமென்க அப்படியல்லாமல் சரம் ஓடுகிறபக்கமாகிய பூரணபக்கத்தில் வந்து நின்றுசொல்லுவானாகில், வந்தவன் எப்படிஎப்படிச் சொன்னானே அப்படிஅப்படியே லபித்துப்போகும் பறிபோன பொருள்வாராது, நஞ்சுமீளாது படுக்கையினேயாளிதேறான் அன்றியும் சூனியத்தில் எவனாவதுவந்து எதையாவது சொன்னாகில் அதுஒருகாலத்தில் அபதமானவார்த்தைளானாலுமாகும் பூரணத்திற்சொன்னசொல் உண்மையாயிருக்கும், இதல்லாமலும் ஆடும்பையரவென்னவல்குலையுடையபெண்ணே வந்தவனுடைய திசையும்-௧௨ங் கவியிற்சொல்லியபடி எழுத்தையும், எண்ணிப்பார்க்கில் அவன்திசைசந்திரன்கூறாகவும்முதற்சொன்னசொல் சூரியன்கூறாகவுமிருந்தால்மேற்சொல்லியகாரியங்களுக்குக் கிஞ்சித்து மத்திபமாயினு முழுமோசமல்ல இன்னமுஞ்சொல்லுகிறேன்கேள்—எ-று, (௧௩)

கருப்பக்குறி கூறுகின்றார்.

கேட்டவனாருயிர்தன்னி லேறிநிற்றற் கிளர்கையிலுயிருளவை பிடித்துநிற்றல், வாட்டமறவருமதலை யிடத்திற்பெண்ணும் வலமாகினின்றுரைத்தல் மைந்தனாகு மீட்டமில்சூனியத்துரெக்கிற் கேடேயாகு மிருஞ்சுழினைமேலுரைக்கி வலியேயாகு நாட்டுமொழிசூனியம் பூரணத்தேயாகி னடுக்கமுடன்மகவுயிர்க்கக் கிடைக்குமன்றே

(இ-ள்,) ஒருவன் கர்பத்தைக்குறித்துக் கேட்குங்காலத்தில்வந்தவன் ஒருசீவன்பேலேறிக்கொண்டிருந்தானானாலும்உயிருள்ளயாதொன்றைக்கையிற்பிடித்துக்கொண்டிருந்தானானாலும்ஒரு சீவனைத்தொட்டு நின்றானானாலும் அவன்நின்றபக்கம் வலமாகில்அதிலும்பூரணமானாற்றான் ஆண்பிள்ளை பிறக்குமென்க இடமாகில் பூரணமானாற்றான்பெண்ணென்க அப்படிபூரணபக்கமில்லாமல் சூனியபக்கமாயிருந்துஎதனைத்தொட்டுநின்றாலும், சும்மாநின்றாலும், வலமாகில், ஆண்தான் இடமாகில் பெண்தான் ஆனால் பிறக்கிறபிள்ளைசாகும் அப்போதுசரம் பார்க்கிறவனுக்கு சுழிமுனையாயிருந்தால் பிள்ளை ஆணுருவினதல்லாமலும் பெண்ணுருவினதல்லாமலும் அடியாகுமென்க இப்படியாகவரிதவன்முன் வலத்தில்நின்று அவன்வந்தகாரியத்தைச்சொல்லிக்கொண்டபின் இடத்தில்வந்துநிற்கில் தாய்வயிற்றிலிருக்கிறபிள்ளை வருத்தப்பட்டு பின்பிறக்குமென்க—எ-று. அன்றேஅசை (௧௪)

கெற்பக்குறியும் போர்வெல்லுங்குறியுங் கூறுகின்றார்

கிடைக்கின்றமைந்தனுஞ் சூனியத்திற்கேடாங் கெடாதிருவர்போரு வதுசூனிமத்திலோது, வடிக்கின்றமொழியின் முதற்சொன்னேன்றே ற்பன் மருவியபூரணத்தின் பின்புசொன்னேன்றேற்பன் நடக்கின் ழிமுனையில்வேட்டலர்கள்போர்த ணட்பாகுமவலத்தியங்கநடப்போன் வெல்வன், இடத்தியங்கிலேந்தடிபோயெதிர்த்தோன்வெல்வனிருஞ்சுழி னைநிற்கிலிடரில்லைபாரே

(இ-ள்,) இதற்குமுன்கவியில் சூனியத்திற் கேட்டபிள்ளைமரிக்கு மென் ன்றாலும் போர்வழக்குவாதைக்குறித்து ஒருவன்வந்து, இன்னவன் இ ன்னவன் எவன்வெல்வானென்றால் வந்தவன் சூனியபக்ஷத்தி லிருந்து சொன்னாகில் முன்சொல்லப்பட்ட பெயரையுடையவன் தோற்பன் பூரணமாகில் பின்புசொல்லப்பட்ட பெயரையுடையவன் தோற்பன்அ ப்போது சரம்பார்க்கிறவனுக்குச் சுழிமுனைநடந்தால்அவ்விருவருமொ ருமித்துப்போவார்கள் இதல்லாமலும் சண்டைவாதுவழக்கு நோக்கிற வனுக்கு அப்போதுசூரியகலையாயிருந்தால் வெல்வன்சந்திரனாயிருக்கி றவன் தோற்பன்; சுழிமுனையாகில், ஒருமித்துப்போவார்கள்; அப்படி சந்திரகலை நடக்கப்பெற்றவன்முன் (கக-ங்) கவியிற் சொல்லியபடி சர த்தை யுள்ளிழுத்துப் பூரணமாக்கிஅச்சரம் நடக்கிறகாலையே முன்னி ட்டு ஐந்தடிபோய்ப்பின்புநேர்நடந்தால் வெல்வன்-எ-று.

சரத்தின் ஸ்பரிசங்கூறுகின்றார்

பார்க்குங்காலிடமெனினும் வலமெனினுமொக்கும் பஞ்சபூதந்தி யக்கம் பகருங்காலை சாற்றியநண்டுடன்சேரிற் பிரிதிவியாந் தப்பாமல ப்பினுக்குத் தாழவோடு மேற்றிசையைநோக்கியெழு மங்கிவாயு மெய் யுணர்நதோற்புறத்தோடு மேன்மைகுன்றாநீரத்துரையாநாற்றிசையுஞ் சிதரியோடனெடுவானென் றுரைத்திடுநீ நிலத்துளோர்க்கே.

(இ-ள்) இடைபின்கலை-சுழிமுனை என்றுசொல்லப்பட்டஇம்மூன்று கலைகளையும் அவற்றிபயன்க ளனுபவத்தையும் பரிக்ஷித்துப் பார்க்குங் காலத்தில்லூத்துவரும் அந்தநாடிகளுக்குள் பஞ்சபூதியங்கள்நடப்பது ண்டு அவற்றைத் தேர்ந்தனுபவிப்பதே அரியதாகும் யாதெனில் மூ க்கிலிருந்துவருகிற சரம்அம்மூக்குத்தண்டைச் சார்ந்துவந்தால் பிரிதி வின்கூறென்றறிக கீழ்நோக்கியோடில் அப்புவியின்கூறென்றறிக மே லாகப்பாய்ந்தால் தேயுவின் கூறென்றறிக அத்தண்டிற்குநேராகியமற் றொருபுறத்தைச்சார்ந்து வீசினால் வாயுவின்கூறென்றறிக இப்படி நா

ன்குபக்களுள் ஒருபக்கமல்லாமல் அந்நான்கு பக்கமும் கலந்துநடந் தால்அதுஆகாயத்தின் கூறென்றறிந்து உலகத்துள்ளவர்களுக்குச்சொ ல்லென்றவாறு இப்பஞ்சபூபதியம் இடத்திற்கும் வலத்திற்கும் ஒன்று தான்—எ-று.

சரத்தின்வடிவமும்நிறமும் அச்சரத்தின்ரசக்கியமும்

கூறுகின்றார்

நிலம்பொன்மையிரதநெடுங்கோணநான்கா நீளம்பன்னிருவிரலாநீ ர்தான்வெண்மை இலகுபிறைவடிவுகண்டந்துவர்த்திக்கு மெட்டிரண்டு விரலோடுயெரிதான்செம்மை நலங்கொண்டமுக்கோண மழற்சிமேலா ம் நாளிரண்டுவிரலோடுநெளிர்கானீலத் துலங்குபுலியறுகோண மொரு பக்கத்திற் றுய்யநாலவிரலோடுஞ்சொல்லுங்காலே

(இ-ள்) பஞ்சபூதியசரம் நடப்பதை இன்னமெப்படிக் கண்டுதெளி யலாமெனில் பிரிதிவுசரம் பொன்மை அப்புச்சரம் வெண்மைதேயுச்ச ரம் செம்மை வாயுச்சரம் கருமையாயிருக்கும் (அப்போதுகண்டத்தில் எவ்வுத உணர்ச்சியாகுமெனில்) பிரிதிவுக்கு கண்டந்தித்திக்கும் அப் புவிற்கு துவர்க்கம் தேயுவுக்கு உவர்க்கம் அல்லது அழற்சியாயிருக்கு ம் வாயுவுக்குப்புளிக்கும் (எவ்வடிவாயிருக்குமெனில்)பிரிதிவுஎண்கோ ணம் வாயு அறுகோணம் அன்றியும் அத்துஓடுகிறநீட்சியைச்சொல்லு ங்கால பிரிதிவு பன்னிரண்டங்குலம் அப்பு-௰௬ அங்குலம்தேயு-அ-அ ங்குலம் வாயு-௬-அங்குலமென்றறிக இதல்லாமலும் இக்கவியில் இரத மென்றுதனியேபோட்டபடியினல் முதல் இரசமாகவே வைத்துக்கொ ள்ளலாயிற்று உலகத்தவருக்குச் சொல்லுங்காலத்தில் இபேதங்களை ய வர்களறிவது அறியதென்று ஒரு பூதியத்திற்குநான்கு குறிசொல்லியி ருக்கின்றார் ஒன்றில்லாவிட்டாலும் மற்றொன்றிலாவதுதெரியவேண்டி யது—எ-று. (௰எ)

இதுவும்அதுவுடன்அப்பூதிநடக்கையில் செய்கருமங்

களின் குணகுணங் கூறுகின்றார்

சொல்லியவான் வடிவதுதான்வட்டமாகுந் துய்யதொருவிரனுகியெ ல்லாஞ்சுற்று-மொல்லைநிறம்படிகங்கைப்பிரதம்வாயு மோடிவருமபூதங் கட்குளதோசொல்க-மல்லனில்நீர்க்குமிகுபயனுஞ்செந்தீ மத்திபமாம் பகர்காலும்மானுந்தீதாம் பலவளையாய்சரம்பார்ப்போன் றன்னைப்போ ற்றி பாகிலையென்றேதியிட்டுப்பணிந்துபாரே

(இ ள்.) ஆகாயபூதியம் நடக்கும்போது நிறம்படிகம் இரசம்கண்ட ங்கசக்கும் வடிவு வட்டம் நீட்சி ஓரங்குலம் இப்படியாக பூதிகங்களி

ன்னுகுணங்களைச் செல்லவெனில் பிரிதிவுக்கும்-அப்புக்கும்-உத்தம தேயு-மத்திபம்-வாயும்ஆகாசமும்தீதாம் வளையலகளைத்தரித்தகரத்தை யுடையபெண்ணேசரம்பார்த்து, குறிசொல்லுகிறவனுக்குத்தாம்பூல தலானவைகள் கொடுத்து உபசாரதிகள்செய்து பின்கேள், இது இ னம்நிற்க, முன்-எ-அ-ங்-கவியசொல்லியபடி சூரியசந்திரகலையிற செ ய்யவேண்டியகருமங்களும் இக்கவியை யனுசரிக்கவேண்டியது ச சகூ-ங் கவியைப் பார்க்கவேண்டியது அதிலும்சரம்பார்க்கிறவன் தா பூலந்தரித்துக்கொள்ளுகையில் வினவிகேட்கிறவனுக்குஞ் சொல்லு றவனுக்கும், நன்கு ஒருவன்பேரைக்குறித்து வினவில் அவனுக்குறு வைகளைகூறுகின்றூர்—எ-று. (ம...)

பாராகுமுதுகுநீர்காலதாகும் பைந்தழல்மார் பவனங்கைப் படர் ள்சென்னி, பேராமல்வினவினபோதித்தபூதம் பேர்படைத்த விடம ளிலே பிழையில்லாம லேராகுபூரணமாம் பக்கந்தன்னிலேறிவெட்டுங் கோலபடுதலிசைத்ததெல்லாங், கூராழிமால்வந்து விலக்கினுலுங் கு றையாமல் வடுப்படுங்காண் குறிக்குங்காலே

(இ-ள்)முன்-மஉங் கவியிற்சொல்லியபடி, இருவரைச் சுட்டிக்காட் டாமலும் சூனியபக்கத்திலிராமலும் பூரணபக்கமாக விருந்துசண்டை க்குப்போகிறவன் என்னுவனெனில் ஆயுதங்களினுல் காயம்பட்டுவரு வானென்றுசொல்க அதிலும் அப்போது பிரிவிகடந்தால் முதுகில்படு மென்க, அப்புவாகில் காலில்-தேயு-மார்பு-வாயு-கை-ஆகாயமாகில்தலை யிற் படுமெனச்சொல்க விஷ்ணுதேவன்வந்து விலக்கினுலும் தப்பித்து க்கொண்டு வரமாட்டானென்க—(எ-று) (மகூ)

இந்தவிந்தப்பூதியத்துக் கிந்தவிந்த ஆயுதமெடுத்துப் போருக வெனவும் அதற்கிவ்விடத்தினிற் உவெனவுங்கூறுகின்றூர்.

கால்மூலைதொடங்கியழன் மூலையேறக்கயிறெனவே கீறிமதிகதிரோ னுகை கோலமேற்குந் தெற்குமதி நிலமாக்கொள்க கொழுங்கதிரோன்கி ழக்குவடக்காகக்கொளக சேல்போலு நெடுங்கண்ணுய் புவிக்குங்கத்தி சேர்ந்தசலம்வானழற்குச் சிலைகாலுக்கு மேற்றண்டாம்வாணுக்காயுதங் கல்லேந்தி விதித்தநிலத்திற்பொருதல வெற்றியாமே,

(இ-ள்.) மேற்கூறியபடி சமர்செய்யவேண்டில் வாயுமூலை தொடங்கி அக்கினிமூலையளவாக, ஒருகயிருபிடித்தாற்போற் சரியாய் பாவனைசெ ய்து அதில்-மேற்கையுந் தெற்கையுஞ் சந்திரன்கூருகவும், வடக்கையு ங்கிழக்கையுஞ் சூரியன்கூருகவுங் கொண்டு போர்செய்கிறவனுக்குஅப் போது சூரியனைஇயங்கில தான்அச்சூரியன் றிசையிற்றுனே நின்று

எதிரியைச் சந்திரன் திசையில் நிறுத்திச் சமர்செய்யவேண்டியது அப்படிச்செய்கையில்[சந்திரனாலுஞ்சரி சூரியனாலுஞ்சரிஎடுத்தறியுமாயுதங்கள் எவையெனில்]சேலடன்போலும் நீண்டகண்களையுடையபெண்ணே பிருதிவாகில்-கத்தி அப்புவாகில் - வாள்-தேயுவாகில்-வில்வாயுவாகில்தண்டு ஆகாயமாகில்கல-இப்படியாகஅந்தவந்த பூதியங்களுக்கு அந்தவந்த ஆயுதங்களேந்தி விதித்தபடி அந்தனிலத்தினின்றுசண்டை செய்தால் வெற்றியடைவன்—எ-று. (௨௰)

நோய்குறி கூறுகின்றார்

ஆகியநோயபுருடருக்காய் புருடர்வலங்கேட்கி லாறுமென்கம்மாதருக்குமாதரிடங்கேட்கிற் சோமிலிம்முறைதப்பிற் பொல்லாதென்கதொலைபாதுநாட்சென்று மீளுமென்க தோகைநில நாட்செலு நீர்கடுமீளுஞ் சுடுதழனுண் மூன்றுதப்பிற் றுஞ்சப்பண்ணுமோகிடுங் காலுளிரண்டின் மிகுந்தாற் கொல்லு மெழில்வான மன்றுதப்பி லிறககும் பின்னே.

(இ-ள் புருடன் கொண்ட பிணிக்காகப் புருடனேவந்து சரம்பார்க்கிறவனைக்கண்டுஇந்நோய் லகுவாமாவெனவினவிலு மந்நோய்தாவினையாம், சரம்பார்க்கிறவனுக்கு வலதுபக்கத்தில் நின்றுகேட்கிலும் நிவர்த்தியாகும், ஐயமில்லை ஸ்திரீகொண்ட நலிக்காக ஸ்திரியேவந்து வினவினாலுங்குணமாகும்வந்தவள் அவனுக்கு இடதுபக்கத்தில் நின்றுகேட்கில் மீளும் சமுசிய மில்லை(முன்பதின்மூன்றுங் கவியிற்சொல்லியபடி சூனியபக்கமாகவே யிருந்தாலுமுத்தமம்) இப்படியல்லாமல்ஆணுக்கு பெண்வந்தாலும் பெண்ணுக்குஆண்வந்தாலும் அவ்வியாதிதீர்வது துல்லபம்அன்றியும் ஒருவன் வலதுபக்கத்தி னின்றுகுறிகேட்டுக் கொண்டேஇடதுபக்கத்தில்வந்து நின்றாலும் ஒருத்தியிடதுபக்கத்தில் நின்றுகுறிகேட்டுக்கொண்டே வலதுபக்கத்தில் வந்துநின்றாலும்நோய்போக்குகடினம், ஆயுனும்மெல்லனநாடசென்று சொஸ்தப்படும் அப்படியப்படியேசரியாய்வந்துகேட்கில் அவன்நோய் நீங்குமென்க அதிலுமெப்போது தீருமெனில் அந்நேரம் பூதியம்பிருதிவாகில் கொஞ்சநாட்சொல்லுமென்க அப்புவகில் விரைவிலென்க அக்கினியாகில் மூன்றுநாட்கலில் விமோசனமென்க மிகுந்தாற்கொல்லும் வானமாகில்அன்றைக்கே நேராய் பிரிந்துகாணுமினுசிலம்மறுநாள் மரிக்குமென்க—எ-று. (௨௧)

இதிலின்முன் கவியிற்சொல்லியவியல்பும்அதன்மேற்கவிகளிற்
செப்பியபூதியங்களின் குணமும்முன்-கூங்-கவியிற
கூறியபடிசரம்பார்க்கிறவன்ஓரிடத்துக்குப்
போகவேண்டியது இத்தருணமென்றும்
பேசவேண்டியதுஇத்தருண
மென்றுங்கூறுகின்றார்

இறக்குமுபயந் தனக்கைந்து நாளிலேகினக்காற் சாவில்லையிதுதாமெய்யே, பிறக்குமொரு பூதந்திளைத்து பூதம்பிரிந்தோடு மதுகுரவ

ன்பேசக்கேட்டுச், சிறப்புடையபயன்றெரிவதல்லா னூலின் செயல
ஹற் றேவர்களுந்தெரியமாட்டார், நிறக்கு மதிக்கிருந் தழைத்தால்வர்
துகேட்டானீள்வெயிலாச்செலசொல்க நினைந்துகேளே.

(இ-ள்) இதற்குமுன்கவியிற்கூறிய பூதியங்களினியற்கையாகிய ணங்களுக்குரியவை சொல்லக்கூடாது, அதற்கு முன் (௰-ங்) கவியி சொல்லியபடி சுழிமுனைநடக்கில் ஆகுமென்பது ஆகாது, ஆகாதென் து ஆகும்போல இப்போதும் ஒருவன் நோயைக் குறித்துக் கேட்கு போது சுழிமுனைநடந்தால் அந்நோயாளி ஐந்துதினங்களுள் மரிக்கு அப்படிமரிக்காமல் தப்பினல் அவனுக்கினி யொருவிமத்து வருமல வும்சாகான் இது மெய்மை, அன்றியும்முன் (௰௪-ங்) கவியிற்சொல் யவண்ணம் ஒரு பக்கமோடுகிறசரத்தில் ஐந்துவகைப்பட்ட பூதியங் ளுண்டு அப்பூதியம் ஒவ்வொன்றுக்குள் ஐந்துபிரிந்து நடப்பனவுண் அவை யெவையெனில் ஒருபிருதிவுக்கு பிருதிவிற் பிருதிவு பிருதிவில ப்பு, பிருதிவிற்றேயு, பிருதிவில்வாயு, பிருதிவில் ஆகாயம் இப்படி இ வ்வைந்துக்குள் ளைந்தாயோடும், இதனையும் மற்றின்நூற்பயன் யாவை யும். குருமுகாந்தரத்தி லறிந்துகொள்வதல்லால், தேவர்களே யானலு ந்தனியே சுருதியைக்கொண்டு வருவைத்தள்ளிச் சுபானுபவத்தால் இ ந்நூலைக்கொண்டே அறிவதுகூடாது அல்லாமலும் சரம்பார்க்சிறவனை ஒருவன்வந்தழைத்தால் அவன் சூரியகலை யியங்கும்போதே போகவே ண்டியது, பேசுகிறதானலும் குறி சொல்லுகிறதானலும் சூரியனியங் கும்போதே சொல்லவேண்டியது மற்றபடிகூடாது மிஞ்சிநடக்கில்மந் திரமென்றறிக, இன்னமுஞ்சொல்லுகிறேன் மனதுற்றுக்கேள்-எ-று.

முன்-௰௬-ங்-கவியிற் சொல்லிய பூதியசரங்களி

னியல்பு கூறுகின்றார்.

கேளிதனைநிலத்திற்கு நீரிற்குங்குணமாங் கெற்பமெனிலாணுகு ங்கிளர்ந் தொருவன்வினவி, ஞளினமிகுலாபங்கள் சாந்திபோக்கு நன யநன்றுகுமங்கித னிலங்கம்வெல்லும்,வாளமரிற் பொல்லாது கெற்பங் கேடாம் வாயுவெனிற் பெண்ணுகுமற்போர் தோர்க்கு, நீள்விசும்பிற்ற னுவித்தையோகந்தானு நீடுமிகெற்பமெனி லலியாய்வீசும்.

(இ-ள்,)பெண்ணே கருத்துற்றுக்கேட்பாயாக,முன்-௧௬-ங்-கவியி ற்சொல்லிய பூதியசரங்களினியல்பு கூறுமிடத்தில் பிருதிவும் அப்பும் நன்மைகளையேதருவன் இதன்பின்(௩௩-ங்) கவியிற்சொல்லியபடி ஐ ந்துநாழிகைக்குமிஞ்சி நடக்கையில் இவ்விரண்டுபூதியங்கள் அதிகமாக

நடந்தால் லாபமுண்டு வேண்டில் கஅ-ங்-கவியையும் பார்க்கில் ஈதிங் ஙனம்நிற்க முன் கச-ங்கவியிற்சொல்லியபடி ஒருபிராணியைக் கைப்ப ற்றுலும், அதின்பேரிலூர்ந்து நில்லாமலுந் தனியேவந்து சூனியத்தி னில்லாமல் பூரணத்தில்நின்று கெற்பக்குறிகேட்டால் அப்போதுசரம பிருதிவாவது, அப்புவாவது நடந்தால் ஆண்பிள்ளை பிறக்குமென்க கூ-வது, கவியிற் சொல்லியபடி சாந்திபண்ணுதல் போக்கு கழித்தல் செய்யவேண்டியபோது அங்ஙனஞ்சொல்லியகலையில் இவ்விரண்டு பூ தியங்களிலேதாவது நடககும்போது செய்தால்பலிக்கும் இதன்றித்தே யுபூதியம் நடக்கையில் பொராங்கம் புரியில் வெல்லும் அப்போரில்வா ளெடுத்தால் மத்திபமாம், அப்போதுகெற்பத்தைக்கேட்டால் அது அ ழிந்துபோகும், வாயு நடக்கையிற் கெற்பம்பெண்ணுமென்க, மற்போ ர்தோல்வியடையும், ஆகாயமாகில் விற்சமர் செயிக்கும் இப்போரிலக்க ணஞ்செப்பிய உ௰-ங் கவியையும் கஅ-ங்-கவியையும் ௰-ங்-கவியையும் பார்க்கவும், கூ-ங்-கவியிற்சொல்லிய யோக பரியநன்மை ஆகாயாச்சர ம்நடக்கையில் கெற்பங்கேட்டால் அலியாய்ப்பிறக்கும் பிறந்துமிறக்கு ம் என்க—எ-று. (உரு)

திதிவாரம் நட்சத்திரகாலகரபலன் முன்-சங்-கவியிலும் நடுங் கவியிலுஞ்சொல்லியபடி பிராதகாலத்திற் சரம்பார்க்கவே ண்டியகிரமத்திலும் விசேஷமாய்பார்க்கவேண்டியது இதுவென்றுங் கூறுகின்றார்

வீயாதபிரமைமுதல் விளங்கும்பக்கம் விரவிவரு முப்பத்தினுமு ம்மூன்றாக, மாயாதுவருஞ்சோமனிடமதாக வருகின்றவருக்கனுக்கும் மூலமதாகச், சாயாதுபுதன்வெள்ளி திங்கண்மூன்றுந் தப்பாது சந்திர னுஞ் சாற்றுங்காலே தேயாது கதிர்செவ்வாய் சனிவியாழஞ் செங்கதி ரோன் றினமென்றுதேறுநீயே

(இ-ள்,) முன் ச-ங் கவியிலும் பின்-நடு ங்கவியிலுஞ்சொல்லிய படி பிராதகாலத்தில் சரம்பார்க்கவேண்டிய கிரமத்தினும்விசேடமாய் ப்பார்க்கவேண்டியதுதெதுவெனில்பொழுதுவிடியருநாழிகையிருக்கை யில் எழுந்துமேல்-ச-ங் கவியிற் சொல்லியபடி சரம் பார்க்கும்போது வளர்பிறை பிரதமைக்கும், துவிதிகைக்கும் - திரிகைக்கும் - சந்திரகலை யுதித்து நடக்கவேண்டியது இப்படி இம் முன்னுங்கு பன்னிரண்டும் பரேக தேய்பிறையில் பிரதமைக்குந் துவிதிகைக்குந் திரிதிகைக்குஞ் சூரியகலை யுதித்து நடக்கவேண்டியது பொழுதுவிடிய - ரு - நாழிகை யிருக்கையிலுதித்தசரம் மற்றவைந்துநாழிகையுங் கலங்காதேடாவே ணடு!ா திதியோகவாரங்களி லெவை நிகழவேண்டிய வெனில் ஞா

யிறுக்குஞ் செவ்வாய்க்குஞ்-சனிக்கும்-வியாழத்திற்கும், சூரியகலை த்தோடவேண்டியது திங்களுக்கும் புதனுக்கும்-வெள்ளிக்குஞ் ச னுதித்தோடவேண்டியது. இப்படி யுதிக்குஞ் சரம் எந்தப்பூதிய லுதிக்கவேண்டியதெனில், பின்-சுரு-ங-கவியைப் பார்க்கவேண்டி இதில் பூதியங்கள் அதிகமாய்க்கதித்தோடில் பயன்கள் என்னவை மெனில் முன் (உரு-ங) கவியிற்றெரியும் அன்றியும் விபரம்-ருரு கவியிற்காண்க-எ று.

இதனுள் நக்ஷத்திரங்களுக்கு நடக்கவேண்டிய காலசரமும்

இதன்மேற் கவியிற்கூறிய வாரங்களுக் குரியனவாகிய

காலசரங்கள்சரிவரில் இடரில்லைபிழைக்கில் இன்

ன வின்ன நிகழுமென்றுங் கூறுகின்றார்.

தேறிடுநீயொன்பதுநாள் பூரமாதி சிறந்தரோகணிசதய முத்திர ட்டாதி, கூறிடுஞ்செங்கதிரோ னாளாகக்கொள்க கூறுநாளடையமதிக் கென்றுகொள்க, வீறிடுஞ்செங்கதிர்பிழைக்கி னேய்காரிக்கு மிடித்திடு மண்டலஞ்செய்விக்கும் வெம்போர்ச்சாவாய், பாறிடும்பொன்பிழைக்கி ன்மன்னர் கேடாம்பூந்தி பதிக்கதிபன்கெடுமிந்து கிளைஞர்போக்கே.

(இ-ள்)பெண்ணே திதிவாரமென்று இரண்டுவேறுபாடாய்க்கூறி னேமென்று தியக்கம்வேண்டியதில்லை விபரம் மேற்கவிகளிற் முனே சொல்லி யிருப்பதனைக்காண்க, இவ்விரண்டினுள் கீழ்வரும்நட்சத்திர பலனாகிய மூன்றினுள்ளும் ஏதேதுகஷ்டமோ அதிலும்ஏதேதுஇஷ்ட மோதெரிந்து அதிலும் வீக்கந் தூக்கம் நோக்கிப்பார்ப்பதென்றுகாண் க, கண்டுதேறியிரு அஃது நட்சத்திரங்களுக்கு நடக்கவேண்டியகால சரமாம் ஏதெனில்-பூரம்-உத்திரம்-அஸ்தம்-சித்திரை-ஸ்வாதிவிசாகம் அனுஷம்-கேட்டை-மூலம்-உரோகணி-சதயம்-உத்திரட்டாதி இப்பன் னிரண்டிலுஞ் சூரியனடக்கவேண்டு மெனக்கொள்க, மற்றப்பதினைந் திலுஞ் சந்திரனடக்கவேண்டும் அல்லாமலும் மேற்கவியிற் கூறியவா ரங்களுக் குரியனவாகிய காலசரங்களில் ஞாயிறுதப்பில்-வியாதி-சனி வறுமைசெய்வாய் சண்டை-சாவு-வியாழம்-தன் மன்னனுக்குக் கேடா ம்-புதன் - அவ்வூரதிகாரிக்குக்கேடு திங்கள் சுற்றத்தாருக்குக் கேடு வரும் (தன்மன்னனென்பதும் அவ்வூரென்பதும் சரம் பார்ப்பவனுக்கு குறி எனவாம்) வெள்ளியின் கவியிற்காண்க, சனி-கருமையுடன் தான் காணக. சனி-வறுமையுடன் தன்கையி லிருப்பதும்போகும் பொன்பி ழைக்கில் மன்னர் கேடாமென்னபதில் தன்தாதாவிற்கு வருத்தம வரி ல் தனக்கு எப்படிப்பொருள்வரும் வராது பதிக்கதிபன் கெடுமென்ப தில் அவனினல் பறிகொடுக்கப்பட்டானெனவரும்-எ-று. உரு

இதன்மேற்கவியிற் கூறுதவெள்ளிபிழைக்கில் நிகழ்வன
விவையெனவும் மற்றதன்மேற்கூறிய திதிபிழைக்
கில் நிகழ்வனவிவையெனவுங் கூறுகின்றார்

போக்கரியபுகர்பிழைக்கி லூர்விட்டேகல் பொருந்தியதோர்மெய்
ந்நூலோதல் புணர்ந்தோர்சாத,லாக்கமதிலிடராமுற் பக்கந்தன்னிலரு
ங்கலகமிரண்டாகி லர்த்தநாச, மூக்கமுடன்மூன்றதனில் போக்குண்
டாகு முரைத்தநான்கிற்கிளைஞர்க்குறுநோயுண்டாந்,தேக்கியவைந்திற்
றேச மலையுமாறிற் செகத்தரசர்கெடுமேழிற் சேருநோவே.

(இ-ள்) வெளிதப்பில் தான்வசிக்கும்பதியைவிட்டு ஒழிந்துபோத லாகவேணும் அவ்வெல்லையைவிட்டு மற்றோரெல்லையைப்போய் மிதிப்பதாகவேணும் வரவரும் தேகநலிவரும் தன்மனைவிக்குச் சாவுவரும் சாவென்பதில் சண்டை பிணக்குநோய் முதலிய வருத்தமாதலையும் சதிபதிகளுக்கும்பொருத்தம் போதலையுங்காண்க) நூலாசிரியர் புணர்ந்தோர்சாதலென்றும் சாமுடிவரைக்கும் வருத்தம்வருமென்றுந் துணிந்துகூறினமையால் நன்மையதேவாருக் அட்டமாசித்திமட்டும் பெருகுமென்றகருத்துக்கண்டு இதன்மேற்கவியில் கூறியதுகாண்க,மற்றதனிற்சொல்லியபடி ஊருக்கு மன்னனுக்கும் அதிகாரிக்கும்வந்தாலும்வரும், இதன்றியில் வளர்பிறைகாலத்தில் பிரதமைதப்பில் யாதேனுமிடர் வரும் துவிதிகை-கலகம்-திரிதிகை-பொருட்சேதம்-சதுர்த்தி போக்குண்டாகும் (சகலவித நஷ்டத்துக்குங் காண்க) பஞ்சமி பந்துக்களுக்கு வியாதி-சஷ்டி அத்தேசத்தாருககும் அரசனுக்கும் வருத்தம் - சத்தமி நலி-அரசனுக்குந் தேசத்தாருக்குமேயுண்டு தனக்கில்லையென்றேமாத்திரத்திற் கூடாவாகுந் தன்னலேயவர்களுக்கு வருத்தம்வந்ததென்ற அவதூறுன பொச்சாப்பினலாவது தாள வருத்தப்படவருமென்ற விவரம் மேற்கவியிற்றானே செப்பியிருப்பதனைக்காண்க-எ-று.

திதிபிழைக்கில் நிகழ்வனவிவையென்றும்

சந்திர சூரியரியல்புங் கூறுகின்றார்.

நோவுடனேசாவுமாமெட்டாகின்மற்றை நுவலாதபக்கமுமிம் மு
...பேகொள்க;தாவில்வெங்கதிரவனின் மதியமுண்டாஞ் சந்திரனுள்
வெங்கதிருந் தப்பாதுண்டா, மோவரியவிவர்களையே யுணரும்போதி
லுற்றசரங்குருமுகத்தா லுணர்ந்துகொள்க; தேவர்பிரானுரைத்தருள
வுமையாள்கேட்டச் செவ்வியிதன்முறைமைதனைத் தெளிந்துதேறே.

(இ-ள்) அஷ்டமிபிழைக்கில் நோவுடன்சாவுவரும் வளர்பிறையிங்ஙனமிருக்கத் தேய்பிறைக்கு மிம்முறையேகொள்வதுஇதல்லாமலும் சூரியனுக்குள் சந்திரனும்-சந்திரனுக்குள் சூரியனு மொன்றுக்குளொ

ன்றுசுரந்து தோன்றுவதுமுண்டாம் உமையவளே தன் சுயவல்ல யினல் தெரிந்துக்கொள்ள வல்லவளல்லவளாகிப் பின் சங்கரனரு ல் தெரிந்துகொள்ளத்தக்க சிறப்பினதாகில் இந்நூலே யார்தான் த ற்ருனேதெரிந்துகொளவர் கொள்ளமாட்டார்கள் ஆதலால் குருவ ஞற்றெளிக—எ று,

மேற்கவிகளிற் கூறியசரம் பிழைக்கில் இடர்வரும் வந்தாலும் அதற்கு உபசாந்தங் கூறுகின்றார்.

தெளிகயர்சேய்மூன்றடியாங் தெற்குமந்தன் செம்பொன்மூன் மேற்குத் திங்கள்வெள்ளி, இளகியநாதடிவடக்குப் புந்திமுன்போ ட்டையலுகிழக்கிரவி யெழுதன்முன்னே; வளமுடனே பூரணபக்கத்தி ற்சென்று வந்திருந்துநமைநினைந்து வழுத்தல்செய்தே, உளமகிழ்ந்து போகிலெல்லாம் பலிக்குந்துன்ப முண்டாகாவிவையனைத்து முணர்ந்து தேறே.

(இ ள்.) பெண்ணே மேற்கவியிற்சொல்லியபடி காலசஞ்சரிப்பட் டுவருமோ வாராதே ஊழ்வினைப்படிக் கல்லவோ நடக்கும் அதை நம் முடைய வசமாக்குதற்கு இலேசோ, எனத் தளர்வுற்றிருக்கவேண்டிய தில்லை சரம்பார்க்கிறவன் முன்கவிகளிற்சொல்லியபடி பிராதகாலத்தி ல அருணேதயத்திற்குமுன்னெழுந்து ஞாயிறு - செவ்வாய்க்கிழமைக ளுக்குத் தென்புரமாய் மூன்றடிமுன் மிக-ங்கவியிற்சொல்லியபடி சரத் தைபூரணமாக்கி யக்காலேயே முன்னிட்டுக்கொண்டு போகவும் சனி-வி யாழங்களுக்கு மூன்றடிமேற்கேபோகவும் திங்கள்-வெள்ளிக்கு-நாலடி வடக்கேபோகவும் புதனுக்கு இரண்டடி கிழக்கேபோகவும்இப்படியா கப்போய்வந்து ஒரு திவ்வியமாகிய ஆதனத்திலிருந்து என்னைநினைத்து துதிசெய்து பின்னெழுந்து எங்கேசென்றாலும் அல்லது அங்கேயிருந் தாலும் முற்கவிகளிற்கூறிய துன்பங்கள் யாதேனுமடராது—எ-று,

இதன்மேற் கவிகளிற்கூறிய ஒரு வாரத்திற்குச் சரந்தம்பில் இன்னவையாமெனவும் ஏழுநாட்களுஞ் சரிவரில் இன் னின்னவையாமெனவுங் கூறுகின்றார்.

தேறுநீயிவையெல்லாஞ்செவ்விதமாக செங்கதிரோன்றன்னுளிற் றிங்களோடி, மாறிவருங்கதிரவனுஞ்சோமனுளின் மறிந்தோடிவருங்கி ழமையேழுமாறிற்; கூறுபட்வுடலுயிர்விட்டேகுமென்க குணமாகுமிக் கிழமைகோணுதோடிற், சீறிவருங்காலனையுஞ்செயிப்பர்மற்றச் சித்த யோகத்துநிலேசித்தியாமே.

(இ-ள்.) இவையெல்லாந்தேர்ந்தறி சூரியனடக்கவேண்டியநாளிற் சந்திரனடந்து சந்திரனடக்கவேண்டியநாளிற்சூரியனடந்துஇப்படியா

கமாறுபட்டு ஒருவார முழுதும் நடந்தால் மரித்துப்போவன் அப்படி யல்லாமல் கிழமை ஏழுந்தவறாமல் மேற்கண்ட நாழிகையுங் கோணம ல்திக்குநோக்கிச் செல்வதுடன் பிராணாயாமமுமாறாமல் நிகழ்ந்துவரு மாகில் இயமனடரான பிராணனுக்கழிவில்லை சீவன் முத்தனாய் வாழ்ந் திருப்பன் அஷ்டமாசித்தியு மவனுக்குச் சித்திக்கும்—எ-று. (உஅ)

குறிசொல்மார்க்கங் கூறுகின்றார்.

சித்தமுடனிரேசகத்தில் வந்துகேட்டாற் செப்பியவப்பொருள்க ளெல்லாந் தீதேயாகும், உத்தமமாம்பூரகத்தில் வந்துகேட்டா லுரை த்தபொருளத்தனையு முண்மையாகு, மெத்தியகும்பத்துரைக்கினன்றே யாகும் வேண்டாரைரேசகத்தில் விளியப்பார்க்க, வைத்தமலம்வாயுநீ ர்கழிபோதென்னின் மாற்றலர்தாங்கெடுவரிது மாறிலாதே.

(இ-ள்) சரம்பார்க்கிறவன் ரேசகஞ்செய்போதில் வந்து கேட்டா ல் கேட்டகாரியஞ் சித்தியாது-பூரகத்திலென்னில் நன்மை அவன்சொ ல்லுகிறது முண்மையாயிருக்கும் கும்பகஞ்செய் காலத்திலாகில் நற்கா ரியம் அது சித்திக்கும், மலம் சலம்-வாயு-கழியும்போதானால் பகைவர் கெட்டுப்போவார்கள் இன்னமிதற்கு விபரம் குருமுகாந்தரத்திற் றெரி ந்துகொள்ளவேண்டியது அல்லாமற்றெரியாது—எ-று. (௩௰)

சனி-வியாழன் பகல்-கூறுகின்றார்.

மாறிவளர்பக்கங்குறையும்பக்கமதிநாடிகதிர்நாடிவளர்பொன்னோ டிற், பேறுமிகவுண்டாகுமபிராணனிற்கும் பின்புரைத்தகாரியங்களெ ல்லாசேரும், கூறுகின்றசனிநாளிற்பகலிரவிற் குலவுசரம்வலமிடத்தி ற்கோணாதோடி, ஞாறுமலர்ப்பொருந்திருமேசொன்னமிந்த ஞாலமெங் கும்புகழ்பெறவேநடக்குமென்றே.

(இ-ள்.) வளர்பிறை வியாழத்திற்குச் சந்திரனுந், தெய்வப்பிறை வியாழத்திற்குச் சூரியனுந் தப்பாமல் நடந்துகொண்டேவந்தால் சிறந் தபேறுண்டாகும், ஜீவன் முத்தனாய்த் தளர்வின்றிவாழ்வான்; இதல் லாமல் சனிக்கிழமைக்கு இரவிலும்பகலிலுஞ் சந்திரசூரிய சரங்கள்மா றுபாடில்லாமல் நடக்கவேண்டியது நடந்தால் இவ்வுலகமெங்குமெச்ச த்தக்க கீர்த்திவந்துறும் மற்றும் முன காலசரஞ்சொல்லியகவியைநோ க்கவேண்டியது—எ-று. (௩க)

குறிசொல்மார்க்கங்கூறுகின்றார்.

நட்புடையவொருவனெங்கே யென்றொருவன்கேட்கி னனிலத்தி லகத்திருப்ப னன்னீர்முற்றம், அடற்குமழுவாகிலுள்ளூர் வாயுவேற் றூ ரம்பலமென்மலைமேற் றுயிலலாகும், விடப்போனன் புவிக்குநிலை

நீர்க்குமீண்டான் வெவ்வழற்குவருகின்றான்வெயில்காலுக்கு மடற்கு
லாயூர்வந்தான்வானமாகில் வருவனொருநாழிகையின் மாறிலாளே

(இ-ள்,) ஒருவன்வந்து இன்னானெங்கே யிருக்கிறானெனில் அ போது சரம் பிருதிவாகில் வீட்டுக்குள்ளிருக்கிறான், அப்புவாகில், மு ற்றத்திலிருக்கிறான் தேயுவாகில் அக்கிராமத்தெல்லைக்குட்டானே யி க்கிறான்-வாயுவாகில் எல்லைக்கப்புறப்பட்டான்,ஆகாயமாகில்மலையே கிறான்-அல்லது தூங்குகிறான் என்று சொல்லவேண்டியது இதுவிட பு றத்தேசம் போனவனைககுறித்துக் கேட்டபோது பூதியமைந்தில மு லாகில், அவ்வூரில்தானே நிலையாயிருக்கிறான் இரண்டாகில், திரும்பிவருகிறான் மூன்றாகில் திரும்பினவன் நில்லாமல்நடந்துவருகிறான். நான்காகில் அவனிருக்குமூருக்குள் வந்தான் ஐந்தாகில் ஒரு நாழிகைக்குள் வந்து வீடுசேர்வானென்று சொல்லவேண்டியது—எ-று. (௩௨)

இச்சரம் மனதுடன்லயப்பட்டால் இன்னவையாமெனக்

கூறுகின்றார்.

மாறிவருவாயுமனோவலயந்தன்னிற் மரிக்கவுயிர்சித்திநிற்கவதுதா
னிற்கும்; கூறுசமயங்கூற்றாற்பயமுமில்லை குறித்திருமண்ணொன்றரை
நாழிகையாக்கொள்க, தேறுபுனற்கொன்றே காலவன்னிக்கொன்றுசீவ
ன்முக்கால்வானமரைசிறந்தநாடி, பாருமைந்துநாழிகைக்குள்வரினற்கு
ன்றிற் பழுதுபடுமுடம்பி லிதுபற்றிப்பாரே

(இ-ள்,) இடதுபக்கத்திலும் வலதுபக்கத்திலும்ஒன்றைவிட்டொன்றை மாறிமாறி நடக்குமிச் சரமானது தேகத்தினூடே லயப்பட்டுப் போகுமேயானால் பிராணனுக்கழிவில்லை அப்படிலயப்பட்டுநிற்கில்மன முதலிய வந்தக்காரணங்களும் வேலையில்லை அசைவறறிருப்பனவாகும் பின்புமற்றெச் சமயத்தாராலும்பயமில்லை யமனாலும்பயமில்லை முன் சொன்னபடி இடதுபக்கமும் வலதுபக்கமும் மாறியோடுஞ் சரம் ஒவ்வொருபக்கத்தி லென்னேரந்தரித்து நடக்குமென்னில் ஐந்துநாழிகைல்-ஒன்றரை நாழிகையும்-நீரில்-கவ-ம்-நெருப்பில்-க-ம்-காற்றில் - தெ-ம்-வெளியில்-உ-ம் ஆக நிறைந்தோடும் இப்படியாகியபூதியங்கள்கூறுகொண்ட ஐந்துகடிகைகளும் ஒவ்வொருபக்கத்திற்குச் சரியாச் சிதையாதோடவேண்டியது இதைவிடகுறைந்தாலும் வளர்ந்தாலும் தேகநலியாம், சரம் லயப்படுமவழி தேடவேண்டியது தேடில்முன்கண்டபயனுண்டாமில்லையேல்நாலடியொன்றுக்குஐந்துநாழிகையும் பூதியங்களினளவே சிதறாமல் நடப்பிக்கவேண்டும் அதுவுமின்றெனில் தேகநலியே வரும்-எ-று. (௩௩)

தத்தமது வாழ்நாட்பிரமாணமறியும்படி

அயன்பங்கற்பங் கூறுகின்றார்.

பற்றிநான்சொன்னபடிபயனமுன்னாட் பகலொருபோதுண்டுபடுகத்தனாகி, மற்றைநாளுத்தரமாமயனந்தன்னின் மாறியிடந்தனிலோரிம்வலந்தெற்காகும், பெற்றதொருநாழிகைதானைந்துநாறும்பெறுங்கடிகைதனிற்குறையிற்பிராணனைசை, முற்றொழிமாநாழிகைக்கோராண்டுதாழு முமையேநான்சொன்னகணக்குண்மைதானே.

(இ ள்.) சரம்பார்க்கிறவனுக்குச் சென்றநாட்கள்போக மற்றும்நின்றநாட்கள் எவ்வளவோ என்னுங்கருத்துகொண்டு பார்த்துத் தெளியுமாறுயாதெனில் அயனசரமாம் அதனைப்பார்ப்பதெவ்வாறெனில்தைமாத முதற்றேதியில் உத்தராயணகாலம் ஆடிமாதமுதற்றேதியில் தெக்ஷணாயனகாலம் இவ்வயனகாலத்திற்கு முன்னாள் பகலில் ஒருபொழுதென்னமுண்டு தத்துவங்களைப் பரிசுத்தமாக்கித் தேக மெலிவதனால்மனத்துக்கும்மற்றவாயுவாதிகாரணங்களுக்கும்வருமிடையூறினைநிருவிதைமாதமுதற்றேதியில் பொழுதுவிடியஐந்துநாழிகையிருக்கையில்பார்க்கும்போது-சரம்-வாரம்-திதி-நட்சத்திரங்களைத்தள்ளி இடதுபக்கத்திலுதித்து முன்கவிகளிற்சொல்லியபடி ஐந்துநாழிகைகளுஞ் சிதறாமல் ஓடுமதனைப்பார்க்கவேண்டியது இதுபோகஆடிமாதமுதற்றேதியில்இதேபிரகாரமாய்ப் பார்க்கவேண்டியது, அப்போதுசரம் வலதுபக்கத்திலோடும் அப்படியோடிய சரம் முற் கூறியவண்மை ஐந்துநாழிகைகளுஞ் சிதறாமலோடினால் சரம் பார்க்கிறவன்தான் செய்யும் பிராணாயாம வுதவியினால் அன்றுதொட்டுவரும் நூறுவருஷகாலம்வாழ்ந்திருப்பன் இதுவின்றி குறைந்தால் அவ்வைந்து நாழிகையை நூற்றொருமாஐந்தாக நூறுக்கிக்குறைந்தநாழிகைஒருமாவோ இரண்டுமாவோ அல்லயன்மேற்றொகைப் பட்டவையோ அதற்கு ஒவ்வொரு வருஷத்தைக்கூட்டிப்பார்த்து குறைந்த ஒவ்வொருமா நாழிகையின்பேரில் கணக்காக்கிக்கொள்ளவேண்டியது; முழுவதுமேதப்பிச் சரம் இடத்திற்குவலமாகவும்வலத்திற்குஇடமாகவும்ஓடில்அவனுக்குட்சீணகாலமென்றறிக

போஜனவிதிகூறுகின்றார்.

உண்பவனுக்கட்புவிவிடமதிக்குவெய்ய வுவர்த்தனகைத்தனகார்த்தலுண்கமுன்னே; பண்பயில்செங்கதிர்க்குநெய்பால்புளித்தல்கன்னல்பாகுடனேதுவார்த்தளமுனுண்டுபார்க்க; நண்பமைவயிற்றிற்குச்சோறுபாதி நன்னீர்காலகாற்றுக்காலாகலகிக் கன்பயினடிகள்சுத்திபண்ணிதூபங் காட்டிமலர்சூட்டியிருள்கழியுங்காலே.

(இ-ள்.) முன்கவியிற்சொல்லியபடி சரம்பார்க்கிறவன்சூரியகலை யங்கிவருகிறமட்டும் போசனமில்லாமல்மற்றதனுக்காககாக்கவேண்டி தில்லை; சந்திரனடக்கும்போதுஞ் சாப்பிடலாம் எப்படியெனில் ஊ டணமானபண்டங்களும், உப்பு கசப்பு காரலாகியபண்டங்களை துக்கொண்டு தாகபானத்தைநிறுத்தி யுண்ணவேண்டியது,சொல்லி டியே சூரியமணடக்கில் நெய்-பால் புளித்தல்-தித்தித்தல் துவாத்த கிய பண்டங்களுடனேசாப்பிடலாம்தாகபாணமு மப்போதேசெய்ய ம்,சந்திரனுக்குஅப்போது கூடாதாயினும் பின்புசூரியனடக்கில் சா பிடவேண்டியது; இதுமாறினாலும் ஆத்திரத்தினாலும் அவாவினாலு சூரியனுக்காக காத்திராமல் அடுத்தடுத்துச் சந்திரனிற்றானேதின்று கொண்டுவந்தாலும் நலியாம,இப்படியாகச் சாப்பிடுகிறதாயினும் அவ் வுணவு வயிற்றிற்குப்பாதிதானாகும் மிஞ்சிலாகாது மற்றப்பாதிக்கு சல ங்காலாகவும் கொள்ளவேண்டியது கொண்டு தசநாடிகளையும் பிராணா யாமமுன்னிலையில் சுத்திசெய்து ஏகாக்கிறசித்தனாய்ச் சரம்பார்க்கவே ண்டியது—எ-று. (ருடு).

சரத்தையேறவொட்டாமலுங் குறையவொட்டாமலுந்தன்

வயபடுத்திக்கொள்ளுமார்க்கங் கூறுகின்றார்

காலகொண்டுகணக் கறிவரர்க்கியாதுங் கப்பா கருதியலெல்லா மு டியுங்காண்போர்க்கெலலா; மேல்கொண்டபுவியிடனே யப்புவன்னிவி ளங்கியகாலவானமுடன்வினவாற்குப், பால்கொண்ட மொழியாளே ப வனங்கட்டிப் பற்றியவாறுதாரப்பரிசுபார்த்துச், சால்கின்ற முதனாடி தன்னுணின்ற தபனன்மதிசெந்தழலாந் தன்மைபாரே.

(இ-ள்.) பலபோலு மினியசொல்லையுடைய பெண்ணே சரம்பார் க்கிறவனுக்கு அனுபவமிந்நூற் சொல்லியபடிவருமோமற்றவ்விதிப்படி பிறழாது போசனமுறைமையும் வந்தொத்துக்கொள்ளுமோ மிகினும், குறையினும் நோய்செய்யுமே எளிதிற் சரிப்படவராதே வராதெனில் தானெப்படி நன்கடைவன் வினவுவார்களுக்கெவ்வாராய் நன்றெனவுந் தீதெனவு மூழறிந்தெடுத் தோதுவனென்று ஐயமுறவேண்டியதில்லை (சரம்பார்ப்பா பரம்பார்ப்பா னென்பதுபோல) சரத்தைக்கணக்கின்ப டியறிந்து பார்க்கிறவனுக்கு யெந்தகாரியமானாலுந் தப்பிப்போகாதுஅ வனைக்கண்டபேர்களுக்கும்நினைத்தகாரியமெல்லாமுடியும் அதெப்படி யென்னில்,பிரிதிவு-அப்பு-தேயு வாயு-ஆகாயமாகியபஞ்சபூதியங்களின் கூறுகூடிய வாவினைப்பாழ்போகாமல் மனமறிவுடனேகட்டி ஆறுங்கர த்தினுள்ள பரிசினையறிந்து தசனாடிகளுள்ளும் முதனாடியாகியபிராண நாடியினின்று மற்றங்கிருந் துதித்தோடுஞ் சந்திரன்சூரியன் அக்கினி

யென்னுமிம்மூன்றினுடையகுணங்களையும் பார்த்தால்கைக்கனிப்போல் இலேசிற்றெரியவரும்—எ-று. (௩௬)

சரம்பார்க்கிறவனுக்கு நன்மைதீமை மரணகாலமறியும்படி

சாயாபுருஷதெரிசனங் கூறுகின்றார்

பாரிலொத்தநிலத்தல்வான் களங்கமற்றாற் பத்தடிக்குள்ளைந்தடியாம் வருவந்தன்னிற் சீரியமெய்நிழல்கழுத்து கைகால்சென்னி சிமிட்டிப்பார்த்திமையாமற் றிகழ்வான்பார்க்கிற், கூருருவம்பொன்கண்டாற் செல்வம் வெள்ளைகுறைவிலுயிர்மெய்மையுயிரிளைக்குற்றம், காருருநோயாறுபிறைகைகால்குன்றிற் கங்குறையின்முப்பிறையிற்காட்டுஞ்சாவே

(இ-ள்) பூமியிலே மேடுபள்ளமில்லாத இடத்தில்ஆகாயத்தில்மேகமற்றவில்லாமல் வெயில்காயும்போது தன்னிழல் ஐந்தடிநீள முதல் பத்தடிக்குப்பட்ட தருணத்தில்தான் அந்நிழல்முகமாய்நின்று கைகளிரண்டையுந்தொங்கவிட்டு கண்களிமையால் அந்நிழல் - தலை-கழுத்து-கைகள்-கால் இவ்வுறுப்புகளி லொன்றைப் பார்த்து அப்படியேஇமையால் ஆகாயத்தைப்பார்த்தா லங்கே அவனுருவம் தோன்றும்அவ்வுருவம் பொன்னிரமாயிருந்தா லவனுக்குச் செல்வம்வரும், வெண்மையெனில் பிராணபயமில்லை ஆயுள்வளரும் செம்மையாகில்ஆயுள்தேயும்,அதர்க்கொரு குறைவும்வரும். கருமையேல்-நலிஇதுவிடஅவ்வுருவில்கைகளாவது காலகளாவது தோன்றாமலிருந்தால் ஆறுமாதங்களுள்மரணம்இதுவன்றித் தலையேகோணமல் கவந்தமாய்த்தோன்றில் மூன்றுமாதத்தின் மரணம-இதல்லாமலுஞ் சந்தினிலு மிப்படியே பார்ப்பதுமுண்டு இதனைமாயாபுருஷதெரிசனமென்றுஞ் சொல்லுவார்கள், இச்சாயபுருஷதெரிசனத்தைவிடாமல் பன்னிரண்டுவருஷம்பார்த்துக்கொண்டுவந்தால் தன்முன்னிற்குமந்நிழல் தன்னுடன்பேசும், பேசில் அதன்முகாந்தரமாம் அஷ்டமாசித்தியையும் பெறலகும்பெறுவதன்றிப் பின்னுஞ்சிலகளில் அந்நிழல் ஓராளுருவ மாகித்தன்னுடனேதிரியும் படுத்தால்தானும் படுக்கும் எழுந்தாலுடனேழும் இவனுக்குவரு நன்மைதீமைகளைமுன்னதாக வுணர்த்தும் இன்னமு மிப்படிப்பட்ட அனேக வற்புதங்கள் விளைக்குமென்றுபெரியோர்சொல்லுவார்கள்—எ-று (௩௭)

மரணவிலக்கணம் வில்லுருவின்பயன் கூறுகின்றார்.

கட்டியகாணிழற்றக்குமுன்பின்னேகக் கடிபுனல்வாய் கொண்டகல்வான்களங்கமற்றால்,பூட்டியநீர்துகல்பிறக்காவுமிழ்ந்தால்வானிற் பொருந்திய வில்லைந்துருவாய் பொலிந்துதோன்று,மீட்டியவில் லுருவுலதோலாண்டுவாழ்வனிதுமுறியிலவ்வாண்டினிறந்துபோவான்,கே

ட்டியவில்லுருமுறிய வணங்குதோன்றிற் கொண்டுபோம் பிறையா, குறித்துக்கூற்றே.

(இ-ள்) வானிற்களங்கமில்லாமல்சூரியனெறிக்கையில்மரநிழல்வீட்டுத் தாழ்வாரநிழல் இப்படிப்பட்ட யாதொருநிழல்தனக்கு முன்னிருக்கச்சரம்பார்க்கிறவன் பின்னின்று வாய்நிறைய சலங்கொண்டுஅந்நிழலருகில் துகள்பரந்து அணுபோல்பறக்க ஓரேதரமாய் உமிழ்ந்து அத்துகளைப்பார்த்தால் அதி லிந்திரதனசு அவ்வைந்து வணங்களுடனே தோன்றும்தோன்றில்பார்க்கிறவனுக்கு அன்றுமுதல் ஒருவருஷமாறி அங்ஙனேஒருபெண்ணுருத்தோன்றில்ஆறுமாதங்களி லிறப்பன்எ-று.

சந்திரசூரியரைப்பார்க்கு மிலக்கணங்கூறுகின்றார்.

குறிகொண்டநிறைமதியங்குறைமதியந்தன்னிற்குலவியதோர்செப்பகலில்கோநெய்யைவிட்டெறிகின்ற மதிக்கதிரைப் பகற்கதிரைபர்த்தாவியல்வெண்மை,செம்மை;பொன்மை;பசுமை; கறுப்பென்னினெறிகொண்டவுயிர்வாழ்வு கெடனேய்சாத னிரைநிரையே யறியிதனிற் றெற்கு மேற்கு; மறிகின்றவடக்குடனே கிழக்குநடுகுறைந்தா லாண்டுதிங்களாறு மூன்றேன்றுநாட்பத்தழிவே.

(இ-ள்) ஒருசெப்பகலில் பசுவின்நெய்யையுருக்கிவிட்டு அதிர்பூரணச்சந்திரனை யல்லது அமாவாசையின்போது சூரியனைப்பார்த்தால் அதிற்றோன்றுகிற சந்திரன் அல்லது சூரியன் வெண்மை - செம்மை-பொன்மை-பசுமை-கருமை இவ்வைந்தில் ஒன்றுளதாய்த் தோன்றும் அதில்வெண்மையேல் பிராணபயமில்லை; செம்மையெனில்வாழ்வுவுண்டாம் பொன்மையாகில் கேடு; பசுமையானல் நோய்; கருமையோ சாவுவரும; அதிலுமப்படிச் சாகிறவனுக் குக்காலமெப்போதெனில்; தென்புறவட்டங்குறைந்தால் ஒருவருடம் மேல்புரம் வட்டங்குரைந்தால் ஆறுமாதம் வடபுறம் மூன்றுமாதம்; கீழ்புரம் ஒருமாத நடுவேதொள்ளையாயிருந்தால் பத்துநாள் நிறைமதியம் பௌரணை குறைமதியம் அமாவாசையென்றறிக—எ-று. (௩௬)

சரீரபழுதுமுதலானமரணவிலக்கணங்கூறுகின்றார்

அழுந்திடுங்கைகாகனன்றிகன்னந்தம்மி லடரந்துதுடிப்புறிவரண்திங்களாறு; மொழிந்ததிங்கள்மூன்றுநாள் பத்திலாவி முடிந்துவிடுமிதுவொழியசெவியிலோசை யொழிந்திடுஞ ளேமுகண்ணி ளொளிதானேந்தா முயர்ந்தமணமூன்றிரண்டிலுரைவேறுனல்; கழிந்திடுநல்லுயிரென்றுகருதிமீசன் கழலிணையைப்போற்றில்வினை கழிந்துபோமே.

(இ-ள்) கை-கால்-நெற்றி-கன்னம்-இவைஅடர்ந்து துடித்தால்மரணகாலம்வந்ததென்றறிக அதிலும் கைந்துடிக்கில் ஒருவருஷம்-கால்-

ஆறுமாதம்-நெற்றி-மூன்றுமாதம-கன்னம்-பத்துநாள்-என்று கொள்ள வேண்டியது, இதுவொழிய காதுகேளாவிட்டால் ஏழுநாளில்மாணம் கண்பார்வைமழுங்கினல் ஐந்துநாள் மூக்கில்கந்தம்போனலும்மூன்று நாள் வாய்குளறிப் பேச்சழிந்தால் இரண்டுநாள்இதையறிந்துகடவுளு டையபாதங்களை நினைத்து போற்றிசெய்தால் வினையென்பனிராது அங்கனே கலந்துபோதலுமாகும—எ று. (சய)

உசுவாசநிசுவாடங்களின் பயனுங்கூறிகின்ருர்

போம்வாயுசிவமுள்ளேபுகுதற்சத்தி போகில்விடம் புகில்முதம்பு கன்றவெல்லாம், ஆம்வாயுபுகிற்போகிலல்லவாகு மடங்கிலவிடங்கெடும்போகிலகலுமப்பாங், தேமேவுசத்தியிரண்டொற்றையீசன் செவியிற் சோர்வருவர்சர மீனமாகில் ஓமேவுமுயிர்ப்போகி னேயாமற்ற துட்புதி னேயாகமெய் யுரைத்தோநாமே.

(இ-ள்)உசுவாசம்-நிசுவாசம் அல்லதுரேசகபூரககாலபலனைச்சொல்லுமிடத்தில் உடலைவிட்டுப்போகிற வாயுவே சிவம்-உட்புகுவது சத்தி-சரம்-வெளிப்பட்டுப் போவதெல்லாம் விடமுன்பதற்குச்சரி சரம்-உட்பட்டுப்புகுவலெலாம் அமுதமுன்பதற்குச்சரி சரம்உள்ளே போகும்போது ஒருவன்சொன்னது அல்லதுநினைந்தகாரியம் ஆகும் வெளிகொள்ளுகையில் ஆகாது அந்தவாயு கும்பகத்தடங்கிலஉண்ணவிடங்கெடுமெனச்சரி-அடங்கியது நடுநாடிவழிபோகி லபாவமென்பதில்லை இதன்றியில் ஒருவன்வந்து குறிகேட்கையில் முதற்சொன்னசொல்லின் எழுத்தை யெண்ணிப்பார்க்கில் ஒற்றையாகில் சிவன்கூறென்றும் இரட்டையாகில்சத்திகூறென்றுங்கொள்ளவேண்டியது,சரம்வெளியேபோகும்போது ஒருவனவத்து இன்னன்போவானேவெனில்போவான்வரான்-உட்புக்கையில் வருவான் சரம்போகும்போது வருவானேவென்றும் புகும்போது போவானேயல்லது வாரான்-புகும்போது வருவானேயல் லதுபோகான் சரம்போகும்போது போவானேவென்றும், மாறுபட்டு வினவில்சரிபடாது போகும்போது போவானேயல்லது வாரான்-புகும்போது வருவானேயல்லது போகான் சரம்போகும்போது நோய் தீருமோவெனில் தீராது புகும்போதுதீருமென்க—எ று. (சக)

குறிசெல்லவும்போர்ப்புரியமார்க்கங்கூறிகின்ருர்

உரைத்தொருவனிறைவிற் போய்குறைவிலுறத்தீதாம் உயிரில்புறத்துரைத்துநிறைபுறத்துறமத்திபமாம், நிரைத்துநிறை பகத்தினின் றுடினன்மையாதம் நிறைமதியந்தன்னிலெகி நேர்ந்திடும்போர்களத்து சுரைத்தசெழுங்கதிர்வெட்டவல்லவனே தோற்பன் வாகானேசந்திரன் வெல்லமாட்டான், விரித்தகதிரினிலேவெங்கதிரில்வெட்ட மேனியிலும்வடுப்பட்டான வெல்வான்ருனே

(இ-ள்) குறிகேட்கவந்த வொருவன், தன்காரியத்தைச் சொல்லிக் கொண்டே முன்னர் பூரணத்தில்வந்தாலும் பின்னர்-சூனியத்தில் வந்துவிடுவானுகில், அக்காரியம்தீதாம்முன்பு சூனியத்தில் நின்று

புபூரணத்தில் வருவானெனில் மத்திபம் இவ்விரண்டு மாறுபாடு லாமல் வந்தவன் கதழாமல் பூரணபக்கத்திற்றானே யிருந்து தான்வ தகாரியத்தைச்சொல்லி முடித்துவிடுவானெனில் அக்கருமம் நன்கின தாம் என்றறிக, போர்க்குறியைச்சொல்லுமிடத்துச் சந்திரகலையியங்கு ம்போது சென்றுசூரியனியங்கும்போது களத்தினேரில் எதிரி எப்படி ப்பட்டவனானாலும் தோற்பேன் இப்படியல்லாமல் சந்திரனியங்கும் போது புறப்பட்டுச் சந்திரனிற்றானே போர்கலக்கிலதோற்பன் இது நிற்க சூரியனிற்றானே புறப்பட்டு அச்சூரியனிற்றானே போரில்வெல் வதிலும் தன்மேலொருபடைபடாமல் வென்றுவருவன்-எ-று,

போர்வெல்லுமார்க்கங் கூறுகின்றார்.

வெல்வனமரிருவர் பேரெழுத்தினையுமெண்ணின் மிகுந்தவெழுத் துடைய-அ-இ-உ-எ-ஒ-வென்னு, நல்லவெழுத்துடனே-ஆ-ஈ-ஊ-ஏ ஓ-கூட்டி நலந்திகழ்பாலன் குமரனரசனேவிருத்தன், சொல்லுவமர்பேரி ன் முதலெழுத்திலுயிரெழுத்தைத் துலங்கியவத்தானத்திற் றுகளற வேகூட்டில், எல்லைமுதற்றானத்தி லெழுத்துடையோன் வெல்வனிரு வரையு மிவரார்கா மிரட்டையெழுத்தோனே.

(இ-ள்.) அ-ஆ-இ-ஈ உ-ஊ-எ ஏ-ஒ-ஓ - இவைமுதலானதுபாலன் கூறெனவும், இரண்டாவது குமரன்கூறெனவும், மூன்றாவது அரசன் கூறெனவும், மற்றவிரண்டும் விருத்தன் கூறெனவும் கொள்ளவேண்டி யது, இதில் சண்டைக்காரனுடைய பேரில்முதலெழுத்தைப் பார்க்கு ம்போது-ஆ வொலியே லாவுடனேயும், ஈ-யொலியே வீயுடனேயும்,ஊ வொலியே லூவுடனேயும், ஏ யொலியே லேயுடனேயும், ஓ-வொலியே லோவுடனேயுங் கூட்டிக்கொண்டு அவர்களை இவ்வெழுத்துக்களின்ப டி பாலன் குமரன் அரசன் விருத்தனுக்கி பாலன் குமரனையும் அரச னையும்வெல்வானெனவும், விருத்தன்மற்றவர்களால் படுவானெனவுஞ் சொல்லவேண்டியது; அதிலும்-எ-ஏ-ஒ-ஓ-விருத்தன்கூறு இவ்விரண டெழுத்துக்களைக் கொண்டவன் அவர்களாற்படுவான்-எ-று.

கருப்பக்குறியின்முறை கூறுகின்றார்.

இரட்டையாமுபயத்திற்கேட்டபிள்ளை யினியபூரணத்திலாண் சூ னியத்திற்பெண்ணாம், மருக்குழலாளிடத்துயிரைவிடியற்கால மகிண ன்வலத்துயிரதனால்வாங்கநட்பாங், தரிக்குநிலம்புதல்வெய்யோனப்பும ந்தன் சந்திரன்றீவியாழஞ்செய்தன்கால்வெள்ளி, நெருக்கியவம்பரம்பூ தங்கிழமையிந்த நெறிநிற்கினன்மைமிகநிகழுந்தானே.

(இ-ள்.) முன்சொன்ன கருப்பக்குறிகளுமல்லாமலிதுவுமொன்றெ னக்காண்க, யாதெனில், உபயசரங்கள் நடக்கும்போது கேட்கப்பெற் றபிள்ளை இரட்டைபேறெனலாம், எப்பக்கமாயிருக்கினும் பூரணபக்க ம் ஆண் சூனியபக்கம் பெண் ஆனாலும் மேற்கவிகளிற் சொல்லிபயன் றானகுமெனக்கொள்க, இதுநிற்க வைதறைப்பொழுதில் மனைவிக்குச் சரம் இடதுபக்கத்தில்நடந்து பண்ணுக்குவலத்தி நடந்தால் அதை அ

ம்மகிணன் அவ்வலச்சத்தாற்றுனேவாங்கி யுட்கொள்ளும் பகியசஞ்செ யதுகொண்டு வருவானெனில், மனைவியிவன்வசமாவாள் பிறன்முகநோக்கும் கருத்து விழையாள் அப்படிவாங்குவது பன்னிரண்டுதரம் வாங்கி யுட்கொள்ளவென்றுஞ் சொல்லுவார்கள், அல்லாவலும், சாரசரங்கள் எங்தெந்தப்பூதியங்களி லுதிக்கவேண்டுமெனில் புதன்-புரிதிவியுல், ஞாயிறு-அப்பில் சனியுக்-திங்களுந்-தோயுவில்; வியாழமுஞ் செவ்வாயும்-வாயுவில், வெள்ளி ஆகாயத்திலுதிக்கவேண்டியது, உதிக்கில் அவ்வாரஞ் சரியாய்நடந்து அதனுல்வரும் நன்மைகள் மிகுபலனை விளக்கும்-எ-று. (௪௪)

இன்னதற்குமூல மின்னதென்றுங் கூறுகின்றூர்.

நிகழ்புவிக்குமூலநீர்வாயுசீவ னெறிதாதுகனல்விண்ணுநிளக்குங் காலே, புகழுடனேபூதத்திற்குளதேசொல்க பொவில்சரராசிவெய்யோன் புதுவெண்டிங்கள், மகிழ்கொள்திரராசியா முபயராசிமறங்கிளருஞ் சுழிமுனையாம்வாரந்தோறு, பகுதல்படர்துயிர்பலிக்குநிலைமைதன்னைப் பங்கயவாதனத்திருந்துபாரே.

(இ-ள) யிருதிவிற்குமூலம்-அ-வா சீவன் க ஆ தாதுஇப்படிநிரை நிரையே ஒன்றுக்கொன்று ஆதாரமாய்வரும் அவைகளைவிளங்க விங்ஙனம், விபரமாய்ச் சொல்லவில்லையாயினும் இதனையும் சரராசியெனப் பட்ட சூரியனையும்திரராசியாகிய சந்திரனையும், உபயராசியாகிய சுழிமுனையையும் மற்றவற்றின் பயன்முதலிய கூறு பாட்டையும் பங்கயாதனத்திலிருந்து மரிவுற்று சிவயோகஞ் செய்தாலல்லது நண்குணர்தலரிது, உயிர் பாழ்போகாது சீவன் முத்தனுதலுக்கு அதுமார்க்கம்இல்லையேல் அவம்போகுமென்றறிக-எ-று. (௪௫)

மூன்றுநாடிகளின் முறமைகூறுகின்றூர்.

பாரிதனைக்கதிர்மதிச்சுன் வாழ்வுகெடுபண்டைநிலை யிம்மூன்றும் பரிந்துகேட்கில், மேரடருஞ் செல்வமவரும வெய்யோனுகில் வெண்மதியங்கேடாகும் விரைந்துவாயு, தீரமிகு சுழிமுனைதா னுகில்முன்பிற்சிறுகாலும்பெருகாது தேவராஞேர், போரருகில்வருமெனினு மதியில் வாரார் பொங்கிய்செங்கதிர்வருவர் புகன்றேநாமே

(இ-ள்) நாம்சொன்ன இச்சரநூலைப் பரிவுடன்பார்ப்பாக சூரியன் சந்திரன் சுழினையென்னு மிம்மூன்றிநாடிகளுள்ளும் வாழ்வு கேடுநிலைமையென்கிற மூன்றுகரும நிதானப்பலன்களைக் கேட்குமிடத்தில் சூரியனுகில் நன்மையையும் மிகுந்தசெல்வத்தையு மடைவார்கள் சந்திரனுகில் கேடுமுதலிய கன்னியக்குறைவாகும் சுழிமுனையாகில் முன்புள்ளபடி ஏராமல் குறையாமல் நிறைவாகும் அன்றியுந் தேவாதிதேவர்களாலே வசீகரிக்கப் பட்டவனுகிலும் செயாசெயத்தின் முன்னிலையில்வரு

வோமென் றுருதியாகச்சொல்லிலுஞ் சந்திரனேயதிகமாக வியங்க வாரார்சூரியனேயதிகப்படில் வருவாரென்றுகாண்க-எ-று.

இதுவுமது-உபசாந்தங் கூறுகின்றார்.

ஞமுரைத்தொகையளவுஞ் சூரியனுடைாம னன்மதியமேல்வாயுந டக்குமாகிற், றுமிளைத்தல்கிளையினைத்தல் பொருள்கேடாதல் சாகுவரு ண்டாதவிவைதப்பதாகும், போமிடத்தின்மதியாகின் மருந்தைப்போக் கிப் பொருந்துமடியிரட்டித்துப் போகநன்றாந், தேமருவுகதிராகினுயி ருள்வாங்கித் திகழும்வலக்காலொற்றிச் செய்கநன்றே.

(இ-ள்) முனசொன்னபடி சந்திரனேயதிகமாய்நடந்தால் நமக்குக் கேடுவருவதல்லாமலும் பந்துகளுக்குமதுவேவாரும் சத்துருக்கள்தோ ன்றிவருவதுதப்பாது சந்திரனிற் போகவேண்டியகாரியமல்லாத சாரி யார்த்தமாய்ப் போகும்போது சந்திரனடந்தால் சரத்தைநீளவெளிவி ட்டு அப்பக்கக்காலேயே யிரண்டு மூன்றடி முந்திவைத்துக் கொண்டு போகவேண்டியது சூரியனிற்போகவேண்டிய காரியமல்லாத சாரியார் த்தமாய்ப் போகும்போது சூரியனடந்தால் அச்சாத்தையேற வுள்ளே வாங்கி அவ்வலதுகாலே முன்னிடடுக்கொண்டு போகவேண்டியது அப் படிப்போகில் போங்காரியம் நன்று-எ-று. (௬எ)

சந்திரகலையில்நடக்கும் பூதியங்களைக்கூறுகின்றார்.

செல்லுமதிதனினிலேத்திற் சரித்திடிற்றிண் வாயுசிவாலயங்கண த்திமதிற்செய்காவில்லடங்கட்ட, நல்லமுடிசூட்டல்குடிபுகுதல்போக்கு ம்நயந்துமரம் வைத்தனன்றுநளீர்நீர்தன்னி, லொல்லைநறும்வாவிகுள ஞ்சோலைவைக்க வுழவிரைக்கமணமுளதேலுவக்கவாகு; நல்லழலிற்றீ ப்பிணியாங்காற்றிலானை நற்பரிதேரொட்டகங்கணுவாயோட்டே.

(இ-ள்) சந்திரகலையில் பிருதிவுநடந்தால் சிவாலயம்மதில் வீடுக ட்டல் குடிபுகுதல்போக்கு சாந்திகழித்தல் மரம்வைத்தல் இவைநன்று ம் அப்புவாகில் குளமுதலியவெடுத்தல் சோலைவைத்தல் நிலத்தைஉழு தல் விரைக்குதல் விவாகஞ்செய்தல் நன்றும் தேயுவாகில் பிணிதீாத்த லாம் வாயுவாகில் குதிரைமுதலிய தேர் கப்பல்ஓட்டலாம்.

இதுவுமது.

ஒட்டியவான ந்திற்செபிக்க வில்போர்செய்ய வுள்ளபின்கலைக்கு மொக்கும்மீதேசொல்க, நாட்டுமதிவெயிற்கதிரோனறிக்கிலந்த நாடிகளி ற்பூரணைசேர்னனறேயாகு, மீட்டுதிசைபிடித்தவைகள்செயல்களாண் பெண்ணியங்கிடிலுஞ்சூனியபூரணமெழுத்தும்; வாட்டமறமதித்தெண் ணிருமித்தற்கு வல்லவனேசரம்பார்க்கவல்லனென்றே.

(இ-ள்) ஆகாயத்தில் மந்திரஞ்செபிக்க விற்போர்செய்யநன்று இது சூரியகலைக்கு மொக்கும், இதுநிற்கச் சந்திரன்சையானாலும் அல்லது சந்திரனேயானாலும், சூரியனே யானாலும் வந்தவன் பூரணபட்சத்தினின்றால் அவன்வந்தகாரியம் நன்றாம், இதுபோக திசை ஆண் பெண் சூனியம்பூரணம் எழுத்து இவைமுதலாய்ச் சொல்லப்பட்ட இச்சரநூலினுள் நுட்பப்பொருள்களைக்கண்டு இது இன்னதென்றும் அது இன்னதென்றும் நிருமிக்கவல்லவன் சரம்பார்க்கவல்லவன்அல்லாதவனல்லாதவனென்றறிக.

சரம்பார்ப்போ ரியல்பு

நன்றானமறைவல்லோர் குலமானாலென் னாமுறைத்தசரநூலினைடைதப்பாம லென்றாரும்பார்ப்பவரேபூமிதேவ ரிசைந்தமானிடப்பிறப்பினின்பங்கொள்வார்; குன்றாதமாபறவையெரும்புதாரும் கொடிமருந்தினளவறிந்துகொண்டுவாழ்ந்து, பொன்றானதெய்வீகம்பொருந்துவார்கள் புகுதுவார்புன்பிறப்பிற் புகலாதாரே.

(இ-ள்) நல்லபிராமணக்குலத்தவராய்ப்பிறந்தாலுமென்னும் அல்லதிழிந்தகுலத்தவராய்ப்பிறந்து மென்னும, இச்சரநாலுணர்ந்து இதனைடதப்பாமல் பார்ப்பவரே பிராமணராவர் சாரசரங்களினுடைய தன்மைகளையறிந்தவராக இப்பூமியின்கண் இவரே தேவரெனயாவராலும்பூசிக்கப்பட்டு வாழ்ந்து பரம்பொருளிற் சாயுச்யமடைவர் பார்க்கமாட்டாதவர் இழிந்தகுருரத்தினராய்ப் புன்பிறப்பிற் பிடித்துக்கொண்டிருப்பார்கள்—எ-று.

புன்பிறப்பிற்பிறக்கினுஞ் சற்குருமுகத்தாற் பொருந்தியயிச் சரநூலைப்புகலக்கேட்டு நன்குணர்ந்துநெறிநடம் போன்யாவரேனு நாமவனென்றிரண்டில்லை நல்லாகேட்கின்; மின்பிறக்குஞ்செந்தழலை யடுத்தவெல்லா மிக்கதழல்வடிவான விதமேபோலத்;தன்பிறப்பிலினிபிறவான்வசமேசாகான் சடைமேனமணிந்தசந்திரனைப்பானே.

(இ-ள்) இழிந்தகுலத்திற் பிறந்தவனானாலுங் குருமுகாந்தரமாயிச் சரநூலைச்சொல்லக்கேட்டு இதனையுணர்ந்து இவ்வழி நடப்பவன் யாவனானாலும் அவன்யாமேயாவன் வேற்றுமையில்லை, நெருப்புத் தன்னையடைந்தவற்றையுந் தன்னுருவாக்கிக்கொள்ளு மியல்போல அவன் யாமேயாவன் அவமாய்ப்பிறந்திறவான், இன்னம் விசேஷமாய்ச் சொல்லுமளவில் சடாபாரத்தில் நாமணிந்திராநின்ற சந்திரன்போன்ற என்முடிமேல்வீற்றிருப்பான்—எ-று. (௫௧)

ஞானசரநூல்சாஸ்திரம்—முற்றிற்று.

உ

சிவமயம்.

பொதியமலையி லெழுந்தருளிய

அகத்தியமகாமுனிவர்.

செய்தருளிய

பஞ்சபட்சிசாஸ்திரம்.

பாயிரம்,

ஆதிபராபர வஸ்துவினுடைய கிருபையினாலே கடல்சூழ்ந்த பூலோகத்திலுள்ள மாந்தர்களுக்குத் துணைக்காரணமாகப் பொதியையங்கிரியி லெழுந்தருளியிராநின்ற பரமோபதேச சின்மய வேதாந்த சிரோமணியாகிய [அகத்தியமகாமுனிவர்.] தமது ஆவியினாலெழுந்த பஞ்சாக்ஷரக்கியானத்தைப் பக்ஷிகளைந்தென்றும், அவற்றின் செய்கைகளைந்தென்றும், யாவருஞ் [சோதிடசொரூபமாயறியு] மிச்சாஸ்திரத்தினால் பலன்பெறும்படி யதீஸ்வரராளாலே ஏற்படுத்திய சரிதைகிரியை யோக-ஞானம்என்னும் நான்கு பூசைக்காரர்களுக்கும், பிரமக்ஷத்திரிய-வைசிய-சூத்திராளுக்கும் மோக்ஷ சாம்பிராச்சிய சைதன்னியத்தை அவரவர்களுடைய சாதனத்துக்கியைந்த சாலோக-சாமீப-சாரூப-சாயுச்சியபதவியை யடைவிக்கும்பொருட்டு முதனூலா யேற்படுத்திய [பஞ்சபட்சிசாஸ்திரத்தில்.] முதலாவது பக்ஷிசாஸ்திரவகைகளும்; இரண்டாவது பூர்வபக்ஷம் பகல்வகுப்பும், ஐந்தாவது அமரபக்ஷமிராவகுப்பும், ஆறாவது அவைகளின் செய்வினைப் பலன்களும், ஏழாவது பக்ஷிகளின்பயனும், எட்டாவது குறிகொள் பயனும், ஒன்பதாவது கணிதவிலக்கணப்பயனும், பத்தாவது சாதனவிலக்கணபபயனும், சூக்ஷமமாகச் சொல்லியிருந்தவைகளுடன் திருஷ்டாந்தமாகக் காஞ்சிபுரத்தி லெழுந்தருளியிருந்த மதுரைச் சிதம்பர தேசிகர் மடத்து ஆதீனப்புலவராகிய [மாணிக்கத்தம்பிரானவர்கள் இதற்கொத்த உள்ளமுடை

ய சூடாமணி சோதிடத்தினும், கேரளசாஸ்திரத்தினும், மண்டலபுருடன் சொன்ன பன்னிரண்டாவது பலபெயர்க்கூட்டத் தொகுதியினும் யாப்பிலக்கணவுரையினுமின்னும் பலநூல்களினு மிருந்தெடுத்துச் சங்கிரகித்துக் கோர்வையாகித்திரட்டிவைத்த [பஞ்சபட்சி சாஸ்திரமூலமும்;] அவ்வவற்றிற்கிணங்கிய சக்கரங்களும், உமாமயேஸ்வரிக்குப் பரமசிவன்சொன்ன [ஞானசரநூல் சாஸ்திரம் மூலமும் உரையும்,] சேர்த்து அச்சிற்பதிப்பிக்கப்பட்டன.

இவை யிலக்கண விலக்கியங்களுக் கொவ்வாமையாய் எழுத்துஅசை-சீர்-தளை-அடி தொடை-சொற்பொருள யாப்பணி முதலியவை பிழையுண்டாயினும் மேலோர் நூலாதலால கற்றோர்குற்றங் கொள்ளாதங்கீகரிப்பதுபோலக் கைபிசகாய்ச் சிலவிடங்களிலிருக்கினும் மன்னித்து இந்நூல்முழுக்கோர்வைவைத்திருக்கும்மானுக்களுதவிசெய்திடில் லோகோபகாரமாயிருக்கும்.

பாயிரம்—முற்றிற்று.